ஓம்
திருச்சிற்றம்பலம்

செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றுந்
திங்கள்தோறும் வெளிவருவது

சிலம்பு கஉ	மெய்கண்டான் யாண்டு-எகக மாசித் திங்கள் 1934ஆம் பிப்ரவரி௴—மார்ச்சு௴	பரல் எ

திருஞானசம்பந்த அடிகள் தேவாரம்

நன்றுடையானைத் தீயதில்லானை நரைவெள்ளே
றொன்றுடையானை யுமையொருபாக முடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறவென்னுள்ளங் குளிரும்மே.

பதவுரை:—

நன்றுடையானை—இன்பத்தைத் தனது உருவமாக உடையவனும்
தீயதில்லானை—துன்பம் என்பது தன்னிடத்தில் சிறிதும் இல்லாதவனும்
நரை வெள்ளேறு ஒன்றுடையானை—மிக்க வெண்ணிறமான எருது ஒன்றைத் தான் ஏறிச் செல்லும் ஊர்தியாக உடையவனும்
உமை யொருபாகம் உடையானை—அருட்சத்தியாகிய உமாதேவியைத் தனது இடப்பாகத்தில் உடையவனும்
சென்றடையாத திருவுடையானை—மலத்தினாலே வியாபகம் தடைப்பட்டிருக்கும் உயிர்களிருக்கிற இடத்துக்குத் தான்செல்லாது எங்கெங்கே எந்த எந்த உயிர் இருக்கிறதோ அங்கங்கே அந்த அந்த உயிரின் அறிவின் நிலைக்குத் தக்கவாறு அருள்செய்கின்றபேருளுடையவனும்
சிராப்பள்ளிக்குன்று உடையானை—திருச்சிராப்பள்ளி மலையில் திருக்கோயில்கொண் டெழுந்தருளி யிருக்கிறவனும் ஆகிய சிவபெருமானை
கூற—அவனுடைய நாமம் ஆகிய அஞ்செழுத்தை ஓதி வழுத்தலினால்
என் உள்ளம்—(சிவமாய் மாறியுள்ள) எனது உள்ளமானது

குளிரும்—சிவபெருமான் திருவடி நிழலடைந்து பேரின்பத்தை எப்பொழுதும் நுகர்ந்துகொண்டே யிருக்கும். ஆதலின் மக்கள்காள் திருச்சிராப்பள்ளி மலையில் திருக்கோயில்கொண் டருளியிருக்கிற சிவபெருமானை வணங்குமின் என்பது குறிப்பெச்சம்.

விளக்கவுரை:—

நன்றுடையானைத் தீயதில்லானை—நன்று என்ற சொல் இங்கே இன்பம் என்ற பொருள்பட நின்றது. அவ்வாறே தீது என்பது துன்பம் என்ற பொருள்பட நின்றது. சிவபெருமான் இன்ப உருவினன் என்ற அவன் சிறப்பு இயல் இங்கே கூறப்பட்டது. "இன்பதனை எய்துவார்க்கீயும் அவர்க் குருவம் இன்ப கன மாதலினுலில்" என்பது திருவருட்பயனிற் கூறப்பட்டிருத்தல் காண்க.

நரை வெள்ளேறென்றுடையானை—என்றது உயிர்களைக் குறிக்கிறது. திருமூலர் திருமந்திரம் 2411-வது பாட்டில் "ஆய பசுவு மடலேறென நிற்கும்" என்று கூறி யருளுகின்றமை காண்க. நரை வெள்ளேறென்றுடையானை என்றதனுல் சிவபெருமான் உயிர்களுக்கு முழுமுதற் றலைவன் என்பது கூறப்பட்டது.

உமையொரு பாகமுடையானை—என்றதனுல் சிவபெருமான் உயிர்களைத் தன்னைப்போல் இன்பம் அடையச் செய்கின்ற பேரருளுடையவன் என்பது கூறப்பட்டது.

சென்று அடையாத திருவுடையானை—"அங்கிங்கெனுதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்தபூர்த்தியாகி அருளொடு" வேறற நிற்கும் சிவமும் உயிரும் எப்பொழுதும் இரண்டறக் கலந்திருத்தலினுல் சிவன் உயிருக்கு அருள் செய்தற்கு உயிரிடத்துச் செல்லவேண்டியதில்லை, உயிருக்கும் சிவனிடத்திற் செல்லவேண்டியதில்லை என்ற உண்மை கூறப்பட்டது. உயிரினிடத்து உள்ளதாகிய சிவத்துவமானது மலத்தினுல் மறைபட் டிருக்கின்றது. படலம் நீங்கிய கண்ணுக்கு ஞாயிற்றினொளி விளங்குதல்போல மலம் நீங்கிய உயிருக்கு சிவத்துவம் தானே விளங்குகின்றது ; இதுவன்றி, உயிர், சிவத்துவத்தை வெளியிலிருந்து பெறுவதில்லை. சிவமும் உயிருக்குச் சிவத்துவத்தைக் கொடுப்பதுமில்லை. இந்த உண்மையை உண்மை விளக்க நூலாசிரியர்:—

"சென்றிவன்தா னென்றிற் சிவபூ ரணஞ் சிதையும்
அன்றவன்தா னென்றுமெனில் அன்னியமா மின்றிரண்டும்
அற்றநிலை யேதென்னி லாதித்தன் அந்தன்விழிக்
குற்றமற நின்றதுபோற் கொள்"

என்று கூறியருளினர்.

"ஒன்றே குலமு மொருவனே தேவனும்
நன்றே நினைமி னமனில்லை நாணுமே
சென்றேபுகும் கதியில்லை நுஞ்சித்தத்து
நின்றே நிலைபெற நீர் நினைந் துய்மினே"

என்று திருமூலர் திருமந்திரம் 2104-வது பாட்டில் கூறியருளிய தும் நோக்குக.

"சிவன் உயிரைச் சென்றடைவதில்லை" என்ற உண்மையைத் திருநாவுக்கரசு அடிகள்

"கன்மன வீர்கழி யுங்கருத் தேசொல்லிக் காண்பதென்னே
நன்மன வர்நவி றில்லையுட் சிற்றம் பலத்துநட்டம்
பொன்மலை யில்வெள்ளிக் குன்றதுபோலப் பொலிந்திலங்கி
என்மனமே யொன்றிப் புக்கனன் போந்தகூவ டில்லையே"

என்று கோயில் திருவிருத்தம் 3-வது பாட்டிற் கூறி யருளினர். திருநாவுக்கரசு அடிகள் "சென்றடையாத திருவுடையான்" என்ற சொற்றொடரைத் திருவாரூர் திருவிருத்தம் 3-வது பாட்டில் "சென்றடையாத திருவுடையான், திருவாரூர் திருமூலத்தானன்' என்றும் திரு என்ற சொல்லுக்குப் பதிலாக செல்வம் என்ற சொல்லை வைத்து திருச்சிவபுரம் திருத்தாண்டகம் முதலாவது பாட்டில் "சென்றடையாத செல்வன்தான் காண்" என்றும் கூறி யருளினமை காண்க.

கூற என்னுள்ளம் குளிரும்—கூற என்பது இறந்தகாலக் காரணப் பொருட்டாய் வந்தது, மழைபெய்ய நெல் விளைந்தது என்றாற் போல. கூற என்பது நாமமாகிய அஞ்செழுத்தைக் கூறி வழுத்த என்னும் பொருள்பட வந்தது. கூற என்றதனால் அஞ்செழுத்தைக் கூறுதலுக்கு முன் உள்ளத்தில் நிகழ்கின்ற அஞ்செழுத்தி னுட்பொருளை நினைந்து கசிந்துருகிக் கண்ணீர் வார்தலும் கூறுதலுடன் நிகழ்கின்ற கோயில் வழிபாடும் இனம்பற்றிக் கொள்ளப்படும். அஞ்செழுத்தி னுட்பொருளை நினைத்தலும், நாவினால் வழுத்தலும், உடலினால் வணங்குதலுமாகிய செயல்களினாலே அடிமையாகிய உயிரினுடைய வேட்கை அறிவு செயல்கள், ஆண்டவனாகிய சிவபெருமானுடைய வேட்கை அறிவு செயல்களுக்குள் அடங்கி நிற்றல் கூறப்பட்டது. சார்ந்தவண்ணமாதற் றன்மையுடைய உயிர் அவ்வாறு சிவபெருமானுடைய திருவருள் நிறைவில் அடங்கி நிற்றல் காரணமாக அவனுடைய எண்குணங்களும் தன்னிடம் நிறையப் பெறுதலினால் சிவானுபவமாகிய பேரின்பம் அடைகின்றது என்ற உண்மையைத் திருஞான சம்பந்த அடிகள் தமது அனுபவத்தில் வைத்து உலகத்தார் அறிந்து உய்யும்பொருட்டு இந்தப் பாட்டில கூறி யருளினர்.

உள்ளம் குளிரும்--உயிர் தனது உள்ளம் சிவகரணமாக மாறி சிவத்துவ மடைந்தபொழுது சிவானுபவமாகிய பேரின்பத்தை உள்ளத்தில் வைத்து உணருகிறது என்பது கூறப்பட்டது. குளிரும் என்ற சொல் உயிரானது பாச வெப்பத்தினின்று நீங்கி, சிவனது திருவடித் தாமரை நிழல் அடைந்த காரணத்தைக் குறிப்பாக உணர்த்துகின் றது.

"மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே"

என்ற திருநாவுக்கரசு அடிகள் அற்புத அருள்வாக்குக் கருத்தையும் நோக்குக.

உயிரானது அஞ்செழுத்தோதி அதன் பொருளை நினைந்து உருகிச் சிவபெருமானுக்கு அடிமைப்பட்டுத் தன்முனைப்பு இன்றி நிற்கப் பேரின் பம் அடையும் என்ற உண்மையைத் திருமூலர் திருமந்திரம் 2118-வது பாட்டில் "சிவாய நமவெனச் சித்தமொருக்கி, அவாய மறவே அடிமைய தாக்கிச் சிவாய சிவ சிவவென் றென்றே சிந்தை, அவாயம் கெட நிற்க வானந்தமாமே" என்று கூறி யருளினர்.

"இந்துவிற் பானுவில் ராகுவைக் கண்டாங்குச்
சிந்தையிற் காணிற் சிவன்கண்ணா—முந்தவே
காட்டாக்கிற் றேன்றிக் கனல்சே ரிரும்பென்ன
வாட்டானு மோதஞ் செழுத்து"

என்ற சிவஞான போத வெண்பாக் கருத்தை நோக்குக.

இந்த அருமையான பாட்டின் முதலாவது அடியில் சிவபெருமானு டைய சிறப்பு இயல்பும் இரண்டு மூன்று அடிகளிலும், நான்காவது அடி யில் குன்றுடையான் என்பதுவரையும் அவனுடைய பொதுஇயல்பும் கூறப்பட்டன. கூற என்னுள்ளங் குளிரும் என்றதனுல் இன்ப உருவின னுய்த் தன் நிலையிலுள்ள சிவபெருமான் உயிர்கள் எல்லாம் தன்னை அகத் தில் வழிபடுதலுடன் புறத்திலும் வழிபட்டு தன்னைப்போல் பேரின்பம் அடையவேண்டு மென்ற பேரருளினுல் தாவர வடிவில் திருச்சிராப்பள்ளி மலையில் சதாசிவமூர்த்தியாய் வீற்றிருக்கின்றான் என்பது கூறப்பட்டது.

நன்றுடையான் தீயதில்லான் என்றதனுல் சிவபெருமான் எல்லா உயிர்களுக்கும் இன்பம் கொடுக்கும்படியான தன்மையுடையவ னென்ப தும், நரைவெள்ளே றென்றுடையான் என்றதனுல் அவன் எண்ணிறந்த உயிர்களுக்கும் இன்பம் கொடுக்கக் கடமைப் பட்டிருக்கும் முழுமுதற் றலை வன் என்பதும், உமையொருபாக முடையான் என்றதனுல் அவ்வாறு கடமைப்பட்டிருக்கும் அவன் தன்னைச் சார்ந்த எல்லா உயிர்களுக்கும்

சார்ந்த அளவில் இன்பம் அளிக்கும் பேருளுடையவன் என்பதும், சென்ற டையாத திருவுடையான் என்றதனுல் அவன் கணக்கிறந்த பல இடங்க ளிலுள்ள எண்ணிறந்த உயிர்களில் எந்த எந்த உயிர் எங்கெங்கே இருக் கிறதோ அந்தந்த உயிருக்கு அங்கங்கே நின்று அருள் செய்யும் பேராற்ற லுடையவன் என்பதும், அவ்வாறு அவன் எங்கும் நிறைந்திருப்பினும் தான் எங்கும் நிறைந்திருப்பதை அறிந்து தன்னே எங்கும் வழிபாடு செய்ய அறியாத உயிர்கள்மாட்டு வைத்த தண்ணளியால் அவைகள் தங்கள் அறிவுநிலேக்குத் தக்கவாறு ஒரு குறியின்கண் வைத்துப் புறத்தில் வழிபாடு செய்து உய்யும்பொருட்டுத் திருச்சிராப்பள்ளி மலேமேலுள்ள திருக் கோயிலில் சிவலிங்கவடிவில் வீற்றிருக்கின்ருன் என்பதும் அடுக்கடுக்காய் முறையாகத் திருஞானசம்பந்த அடிகள் இந்தப் பாட்டிற் கூறியிருக்கிற கருத்துக்களேச் சிவநேயர்கள் நினேந்து உருகி அகங் குழைந்து இன்ப மெய்துவாராக.

மா. வே. நெல்லேயப்பபிள்ளே.

திருத்தம்

சென்ற ஆருவது பாற் ரெடக்கத்தில் கண்ட செய்யுட் டலேப்பு "திருவாசகம்" என்றிருப்பது அச்சுப்பிழை. அதனே "உமாபதிசிவம் திருமுறைத் திரட்டு—அப்பர் தேவாரம்" என்று நேயர்கள் திருத்தி யமைத்துக்கொள்ள வேண்டுகிரேம்.

அச் செய்யுள் உரை நமது செல்வி இதழாசிரியர் கூட்டத் தலேவர் திருவாளர் மா. வே. நெல்லேயப்ப பிள்ளே அவர்கள் எழுதியதாகும்.

சிவம்

அகண்டமாய், அருள் வெளியாய், தோற்றமும் இறுதியு மற்றதாய், எங்கும் நிறைந்ததாய், என்றும் உள்ளதாய், எல்லாம் அறிவதாய், எல்லாம் வல்லதாய், மலரகிதமாய், குணங்குறி யற்ற தாய், பெயரும் உருவமு மில்லாததாய், பேரொளியாய், கற்பனே கடந்ததாய், போக்கு வாவு, அண்மை சேய்மை, இன்பம் துன்பம், பருமை நுண்மை, தூய்மை தூய்மையின்மை, ஒற்றுமை வேற் றுமை, குற்றம் நற்றம், குறைவு நிறைவு, உயர்வு தாழ்வு முதலிய வேறுபாடுகளற்றதாய், எவ்வகைச் சமயத்தோர்க்கும் அவ்வவர் பொருளாய், மெய்யன்பொடு வணங்கும் அன்பர்களின் அன்பே வடிவாய் இலகும் தனிப்பரம்பொருளே சிவன் என்னப்படுவதாம். மேற்குறித்த மங்கலத் தன்மைகள் யாவும் ஒருங்கே பொருந்தி யிருத்தலால் மங்கலம் என்னும் பொருள்கொண்ட சிவன் என்னும் திருப்பெயர் உண்டாயிற்று. —கா. சிவ. க.

சமயமும் தத்துவமும் :
Religion & Philosophy

சைவர் மகாநாடு

திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள் தலைமையுரை

(முன் உ௰சு-ம் பக்கத் தொடர்ச்சி)

சைவ விளக்கம்

இனி, சைவம் என்றால் அஃது ஒரு சிறு கூட்டத்தாரின் குறுகிய கொள்கை யெனக் கருதும் பேரறிவாளரும் உளர். ஏனைச் சமயத்தினரிற் போல சைவ ரென்போரிலும் குறுகிய கொள்கையுடையார் இருத்தல் கூடும். எனினும் சைவ சமயம் குறுகிய கோட்பாட்ட தென்பது சிறிதும் பொருந்தாது. பிற சிறப்புக்கள் பற்றிச் சைவ சமயம் பாராட்டப் படாதொழியினும், வேறெச்சமயத்தினுங் காணப்படாத அத்துணை விரிந்த நோக்கமும் பரந்த கொள்கையும் உடைத்தாதல் பற்றியேனும், அது யாவரானும் பாராட்டப் பெறுதல் வேண்டும். எந்த உயிரையும் எப்பொழுதும் நிரயத்துக் கிடந் துழலுமாறு சைவ சமயம் விட்டு விடுவதில்லை. வெவ்வேறு தகுதியுடைய மக்கள் அனைவர்க்கும் ஏற்றபடி முறைகளை வகுத்து எல்லோரையும் உயர் நெறியிற் செலுத்திப் பேரின்ப மளிப்பது அதன் இயல்பாம். வேறு எச் சமயத்தையும் உலகிற்கு வேண்டாவென அது வெறுத்து ஒதுக்குவது மன்று.

> "சந்தான கற்பகம்போல் அருளைக் காட்டத்
> தக்கநெறி இந்நெறியே காண்சன் மார்க்கம்"

என்று தாயுமான வடிகளும்,

> "விரிவிலா அறிவி னார்கள் வேறொரு சமயஞ் செய்தே
> எரிவினாற் சொன்னா ரேனும் எம்பிராற் கேற்ற தாகும்."

என்று திருநாவுக்கரசுகளும் அருளிச் செய்தன இங்கே சிந்திக்கற்பாலன. மற்றும் சைவத்தின் பரந்த கொள்கையை வரலாற்று வாயிலாகப் பெரிய புராணம் தெளிவுபடுத்துதல் கண்கூடு. குல வேற்றுமை, நிலை வேற்றுமை, பால் வேற்றுமை என்பன ஆண்

டவனை வழிபட்டுப் பேறு பெறுவதற்குத் தடையாவன அல்ல. எல்லோரும் வீடு பெறுதற் குரியர் என்பதே சைவத்தின் கொள்கை.

இனி, சைவ சமயமானது பழந்தமிழ் மக்களுடைய கடவுள் கொள்கையின் வேறுபட்டதன் றாகலின் நாமும் அம்முறையே சமயத்தைப் பேணி ஒழுகுதல் கடனாகும். தமிழருடைய கொள்கைகளைச் செவ்விதின் விளக்குவன தோல்காப்பியம், திருக்குறள் என்ற இரண்டு பெரு நூலுமாம். தெய்வப் புலமைத் திருவள்ளுவனார் மக்கள் வாழ்க்கை நிலையை இல்லறம் துறவறம் என இரண்டாக வகுத்துக்கொண்டு, இம்மை, மறுமை, வீடு என்னும் மும்மைப்பேறும் எய்துதற்குரிய வழிகளை மிகத் தெளிவாக விளக்கியுள்ளார். கற்றுத் துறைபோய காதலனும் காதலியும் அன்பும், இன்சொல்லும், அடக்கமும், ஒழுக்கமும் மிக்காராய்த் தீவினைக் கஞ்சி, அறத்தாற்றி னீட்டிய பொருளால் விருந்தோம்பல், ஒப்புரவாற்றல், வறியார்க்கீதல் முதலிய அறங்களைச் செய்து வாழ்தல் இல்லற வாழ்க்கையாமென்றும், அதன் இம்மைப் பயன் இன்பமும் புகழுமாக, மறுமைப்பயன் துறக்கம் பெறுதலென்றும், இல்லறம் கடைபோய வழி எல்லா வுயிர்களிடத்தும், அருளுடையராய், வாய்மை, கொல்லாமை முதலிய விரத ஒழுக்கங்களைக் கடைப்பிடித்து, மனத் தூய்மையடைந்து, நிலையாமை கண்டு, இருவகைப் பற்றும் அற்று, மெய்ந் நூற்பொருள்கள் கேட்டல் முதலியவற்றால் மெய்யுணர் வெய்தி, முக் குற்றங்களின் நீங்கி யிருத்தல், துறவற வாழ்க்கையா மென்றும், அதன் பயன் பிறவித் துன்பத்தினின்று நீங்கிப் பேராவியற்கையாகிய பேரின்பப் பெருவாழ்வு பெறுத லென்றும் யாவரும் இனிதின் உணருமாறு கூறியிருக்கும் திறப்பாடு எத்துணையும் போற்றற்குரிய தொன்றாம். உயிர்கள் யாதேனும் ஒன்றனைப் பற்றியே நிற்கும் இயல்பின வாதலின் அவை அகப்பற்றும் புறப்பற்றுமாகிய பசு பாசப்பற்று நீங்குதற்கு ஆசிரியர் கூறியுள்ள உபாயம் பதியாகிய கடவுளைப் பற்றுதலே யாம் என்பது,

> " பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
> பற்றுக பற்று விடற்கு "

என்னும் பொருளுரையால் விளக்கமாம். கடவுளைப் பற்றுத லெனினும் அவனோதிய வீட்டு நெறியைப்பற்றி யொழுகுதலெ

னினும் இடையறாது அவனைச் சிந்தித்தலே யாம். எனவே, மனையின்கண் கூடி வாழ்வாராக, வனத்தின்கண் தனித்துவாழ் வாராக, இறைவனைப்பற்றி நின்று ஏனைப்பற்றுக்களின் நீங்கி ஞேரே பிறவியறுத்து வீடு பெறுதற் குரியாரென்பது ஆசிரியர் கருத்தாதல் பெறப்படும்.

தொல்காப்பியனாரும் ஒவ்வொருவரும் தத்தம் ஒழுகலாற்றின் மேம்படுதலே வாகையா மென்று வாகைத் திணைக்கு இலக்கணங் கூறிவரு மிடத்தே,

“கட்டமை யொழுக்கத்துக் கண்ணுமை யானும்
இடையில் வண்புகழ்க் கொடைமை யானும்
பிழைத்தோர்த் தாங்கும் காவலானும்”

என்னும் பகுதியால் இல்லற ஒழுக்கத்தையும்,

“அருளொடு புணர்ந்த அகற்சியானும்
பொருளொடு புணர்ந்த பக்கத்தானும்
காமம் நீத்த பாலி னானும்”

என்னும் பகுதியால் துறவு, மெய்யுணர்வு, அவா வறுத்தல்களையும் குறிப்பிடுவாராயினர். இப்பகுதிகட்கு இளம்பூரணரும், நச்சினார்க் கினியரும் திருக்குறளையே மேற்கோளாகக் கொண்டு, இல்லற வியல்பு, துறவற வியல்புகளை விரித்துக்காட்டி உரை வகுத்திருத் தலும் காண்க. மற்றும், நச்சினார்க்கினியர் ‘காமம் நீத்தபாலினா னும்’ என்பதற்கு உரைகூறிய விடத்தே பால் என்றதனால் உலகி யலுள் காமத்தினைக்கைவிட்ட பகுதியினையுங் கொள்க” என வுரைத்து,

இளையர் முதியர் என இருபால்பற்றி
விளையும் அறிவென்ன வேண்டா—இளையனாத்
தன்றாதை காமம் நுகர்தற்குத் தான் காமம்
ஒன்றாது நீத்தான் உளன்,

என மேற்கோள் காட்டி யிருத்தலும் சிந்திக்கற் பாலது.

இல்வாழ்க்கையாயினும், புறவாழ்க்கையாயினும் இறை வனைப்பற்றி நின்று, ஏனைப் பற்றுக்களின் நீங்கினாரே வீடு பெறு தற்குரிய ரெனும் இவ்வுண்மைக்குப் பெரிய புராணத்துக் கூறப் பட்ட திருத்தொண்டர்களின் வரலாறுகள் சிறந்த எடுத்துக் காட் டுக்களாம். திருமுறைகளும், சித்தாந்த நூல்களும் இவ்வுண்மையை விளக்குவனவே. ‘பற்றாங்கவை யற்றீர்’ என்னும் திருவாசகத்

திருப்பாட்டின்கண் இக்கருத்து இனிது விளங்குதல் காண்க. பற்றற்குரியதனைப் பற்றித் துன்பத்திற் கேதுவாய பற்றுக்களின் நீங்கி நற்கதி யடைய விரும்புவீரெல்லாம் விரைந்து ஓடி வம்மின்! திருப்பெருந்துறை இறைவன் சீரைக் கற்றல் செய்ம்மின்! அவன் கழல்களைப் பேணி வழிபடுமின்! வழிபடும் அடியரோடுங் கூடு மின்! என்று வாதவூரடிகள் நம்மனோர்க் கருளிச்செய்யுந் திறன் இருந்தவா றென்னே!

இங்ஙனம், தமிழ்நூற் கருத்தும், சைவ சித்தாந்த உண்மை யும் வேறுகாமையை எண்ணும்பொழுது பண்டைத் தமிழ் மக் களின் வேறு சில உயரிய பண்புகளும், கொள்கைகளும் நம் நினை விற்கு வரக்கூடியனவாகவுள்ளன. எந்தக் கடவுளரையோ சமயத் தையோ இகழ்த லென்பது பழைய தமிழரிடத்து ஒருசிறிதும் காணப்படாத தொன்று. அத்தகைய சிறந்த பண்பினை நாமும் கொண்டு ஏனையோரும் கொள்ளுமாறு செய்யின் சமயப் பூசல் என்பது இல்லாது ஒழியும். திருமால் வழிபாடு சைவர்கட்குப் புறம்பாய தொன்றன்று. மற்றும், எச்சமயத்தினர் தங்கள் சம யமே உயர்ந்ததெனக் கூறினும் அன்னார்க்கு அவ்வுரிமை உண் டென்பதனை மதித்து நம் நிலையினின்று வழுவாதிருத்தலே நமது கடனும். எந்தச் சமயத்தையோ, சமயக் கடவுளரையோ எள்ளி நகையாடல் என்பது புன்மையாம் என்பதனைக் கருத்திற் பதிப் போமாக.

பிறப்பினால் உயர்வுதாழ்வு இல்லை

இனி, தமிழருடைய மற்றொரு சிறந்த கொள்கை, பிறப்பி னால் உயர்வு தாழ்வு இன்று என்பது.

> 'பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வா
> செய்தொழில் வேற்றுமை யான்'
> 'நல்ல குலமென்றுந் தீயகுல மென்றுஞ்
> சொல்லள வல்லாற் பொருளில்லை—தொல்சிறப்பின்
> ஒண்பொருள் ஒன்றோ, தவம், கல்வி, ஆள்வினை
> என்றிவற்றா னாகுங் குலம்.'

என்பன தமிழருடைய அடிப்படையான கொள்கையைத் தெரி விப்பன. பன்னிரு திருமுறைகளையும், எழுத் தெழுத்தாகச் சோதித்துப் பார்ப்பின் சைவ சமயத்தின் அடிப்பட்ட கொள்கை

யும் இதுவே யென்பது போதரும். சமய நெறியிலே சாதி குலம் என்னும் எண்ணம் உதித்தலே உய்தியில் குற்றமாம் என்பது சான்றோர் கருத்து. (தொடரும்)

மும்மையாலுலகாண்ட மூர்த்தி

(வித்வான் T. P. மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் M.A., B.L.)

(முன் ௨௩௪-ம் பக்கத் தொடர்ச்சி)

போற்றும் புகழ்:—கல்வித்துறை, செல்வத்துறை என்ற பல நற்றுறைகளிலும் ஈடுபட்டுள்ள மாந்தரனைவரும் பண்டைநாள் தொட்டுப் போற்றும் பெருமையுடையது என்றல்லவா உலகத்தினர் எல்லாம் இதன் புகழை உணர்கின்றனர். ஆனால் இதனைப் போற்றாதாரும் உள்ளார்கள். களவுமுதலாம் தீயதுறையில் ஈடுபட்ட மாக்கள் இதனைப் போற்றுவதேது? ஏன்? திருடர் களவாடச் செல்வம் அங்கில்லையோ? திருடர் செல்வத்தைத் தமக்கென அவாவி நிற்கின்றனரே யன்றி மூர்த்தியார் காந்தியார் முதலிய பெருமக்களைப் போல அதனைக் கடவுட் செல்வம் எனப் போற்றி இறைபணிநின்று தமக்கெனக் கொள்ளாது நடமாடுங் கோயில்களாம் நல்லுயிர்க் கடவுள்களுக்கே என கொடுத்துதவி வழிபட்டு நிற்பரோ? அவ்வாறு செய்யாக்கால் போற்றுதல் என்ற சொல்லுக்குப் பொருளில்லையன்றோ? ஆதலின் நற்றுறை மாந்தரே போற்றுவர் என்க. ஈரமும் அன்பும் இல்லாதவருக்கு அங்கு இடமே இல்லை. பொறாமை வாய்ப்பட்ட அவர்களுக்கோ, இங்குள்ள இயற்கை வனப்பும் செல்வமும் துன்பமாகவே தோன்றுகின்றன. இந்த இயற்கை வனப்பை அருளம்மையின் அழகிய வடிவமாகக் கொண்டு போற்றாது கண்ணை மூடிக்கொண்டே ஓடிப்போவாரை என் என்பது? குழந்தையின் பசிமுகம் நோக்கிப் பால்சுரந்து ஊட்ட வரும் தாயைவிட்டு ஓடோடியும்போய்ப் பசியால் வாடி வதங்கும் குழவியின் போக்கே இவர்கள்போக்கும் என்க. இவர்கள் நார்மன்னு சிந்தையற்றவர்; நற்றுறைமாந்தரும் அல்லர். ஆதலினால் அன்றோ தம்முடைய அமணக் கொள்கையை இவ்வழகிய நாட்டில் பரப்ப முன்வந்தனர். நிலைத்திணைப் பொருள்களும் இயங்குதிணைப் பொருள்களும் ஒன்றிற்கொன்று ஒத்தனவாக

இணைந்தியைந்து ஒற்றித்து நிற்பதனைச் சேக்கிழார் இவ்வாறு நன்கு புனைந்துரைக்கின்றார். மக்கள் ஓங்கியுயர்ந்து வாழ்வதுபோல அவர்கள் வீடும் ஓங்கியுயர்ந்து நின்றன எனப் புனைந்துரைப்பதனை அன்புக்கண் கொண்டு காணவேண்டும் :—

பெண்: உடல்விளக்கம் :—

சாயும் தளிர்வல்லி மருங்குல் நெடுந்தடங்கண்
வேயும்படு தோளியர் பண்படு மின்சொற் செய்ய
வாயும்படும் நீள்கரைமண் பொரும்தண் பொருந்தம்
பாயும் கடலும் படும் நீர்மை பனித்த முத்தம்.

என்று சமணர்கள் வெறுத்துப் புறக்கணித்த பெண்களை அந்நாட்டின் செல்வத்தோடு ஒருங்கியைய வைத்துப் புகழ்கின்றார். பெண்களைப் பேய் என்றஞ்சி ஓடுவதோ? தாயின் அன்பு குழைந்த வடிவம் எனப் போற்ற வேண்டாவோ? இல்லறத்தின் நின்றும் பழகிய பழக்கத்தால் பெண்களைக் காதற் கழிவிடம் என எண்ணும் எண்ணத்தை யறவே ஒழிக்க வேண்டாவோ? ஒடிந்து விழுகின்றாற் போலத் துவளும் இடையோடு எதிர் நிற்கும் நமது மகளை நாம் நமது தாயெனப் போற்றுவதுபோல, மற்றைய அழகிய மகளிரின் சாயுந்தளிர் வல்லி மருங்குலைக்கண்டு, அவ்வருள் வடிவங்கள் உலகப் பெருந்தாயின் அன்புள்ளம் எவ்வாறு நெக்குருகிக் கரைந்து குழைகின்றது என்பதனைக் காட்டுகின்றன எனக் கொண்டு அன்பு வடிவாகி வழிபடவேண்டாவோ? ஈதோ பச்சிளங் கொம்பு இதுபோது தான் தளிர்விடுகின்றது. தொடவும் நாம் கைகூசும் இவ்விளந்தளிர்கள் ஒளியோடும் மின்னிப் பொலிகின்றன. இக் கொடி, தானே நிற்கமாட்டாது கொழு கொம்பிற் சாய்ந்து பின்னிக் கொள்கிறது. அவ்வசைவில் என்ன மென்மை! அம்மென்மையில் என்ன அழகு!! இப் பச்சைப் பசுங் கொடியைக் கண்டு வணங்குதலால் என்னகேடு விளைகின்றது? இக் கொடியேபோல இடை துவண்டு காட்சி கொடுக்கும் பெண்களை இறைவியின் வடிவெனக்கொண்டு வணங்குதலால் தான் கேடு என்ன விளையப் போகிறது? காதற் கழிவிடம் எனக் கருதவும்போமோ? மகளைத் தழுவும் மறக் கொடியோன் அவ்வாறு கருதுவான். அத் துவட்சியைக் கண்டவுடனேயே அவர்களைப் போற்றவேண்டும் என்ற எண்ணம் எழவேண்டாவோ? கொழு கொம்பை நாடிநிற்கும் கொடிகளைப் போல, கொழுநன் மார்போடு

பிணைந்து நிற்கும் பெண்களையும் வேறொன்றும் உள்ளத்தே கருதி நோக்குவாரும் உளரோ? உளரானால், அவர்கள் தீத்துறை மாந்தரேயாவர்; நார்மன்னு சிந்தையற்றவரே யாவர். இப்பெண்களுக்குக்கொடியை ஒப்புமைகூறிய சேக்கிழார் சாயுந்தளிர்க் கொடிபோலக் கொழு கொம்பாம் கொழுநனொடு வாழும் கற்புடை மகளிரையே போற்றுகின்றார். கொடியழகு மட்டுமோ? அவர்கள் கண்ணழகை என் என்பது! நீண்டது! அகன்றது! அதிலேயே இறைவியின் அருள் ஒளியைக் கண்டுகொண்டே நிற்கலாம் அன்றோ? இவ்வருளாழத்தைக் கண்டுபோலும் கடலைக் கண்ணுக்கு ஒப்புமை கொண்டனர் ஒருசில புலவர். தெளிந்து நிற்கும் நீண்ட நீர்நிலையைக் கண்டபோது அதன் குளிர்ச்சியில் ஈடுபட்டு நமது உள்ளம் ஒடுங்கிவிடுகின்றது. மூசுவண்டறை பொய்கையின் காட்சியை இக்கண்களினும் கண்டு நமது மனம், இயற்கைத்தாயாம் இறைவியினிடம் குவியாதோ? அவர்கள் தோளின் அழகே அழகு! பச்சிள மூங்கில் பசந்தும் குளிர்ந்தும் வழுவழுத்தும் கண்ணைக் கவர்ந்தும் நிற்பது போல, இவர்கள் தோள்களும் காட்சிதருகின்றன அன்றோ? பச்சிள மூங்கிலைக் கண்டு களித்தல் தீமையாகாது. இப் பெண்களின் இயற்கை வனப்புமிகுந்த தோள்களை அருள் வடிவாகக் கண்டு வழிபடுவதால் வருங் கேடு என்ன? ஆனால் ஒன்று இன்றியமையாது வேண்டப்படும். பச்சிள மூங்கிலை இயற்கையன்னையின் வடிவமாகக் கொண்டு வழிபட்டுருகுவது போலவே தாய்மாரின்தோள்களையும் கண்டு வழிபடுதல் வேண்டும். காதற் கழிவிடம் என எண்ணுபவனுக்கோ சியும் தோலுமே மிஞ்சி நிற்கும்; அருளம்மை பறந்தோடிப் போவாள்.

உள்ளத்து விளக்கம் :—இம்மகளிரின், உடல் விளக்கம் இருந்தபடி ஈது. மேலே, உள்ளத்து விளக்கத்தை என் என்பது? இவர்களது உள்ளத்தே எழும் கருத்துக்கள் வாய்வழியே சொல்லாக உருப்பெற்று வரும்போது, அச்சொற்கள் யாழிலும் குழலினும் எழும் இன்னிசைப் பண்களினும் மிக இனியவாகப் பொங்கி வழிகின்றன. யாழிசை கேட்டும், குழலிசை கேட்டும், இன்னிசைப் பண்ணொலி கேட்டும் நிற்கையில், மனக் கொதிப்படங்குமேயன்றிக் காதலாற் கண்ணழிதல் இங்கில்லை. உள்ளத்தொளியாம் சொற்களைக்கேட்டு அன்பொளிரும் அறிவுநிலை பெற்

றுக் கடவுளருகே செல்கின்றோம். மெய்யுணர்ந்தார் இறைவியின் எதிர் ஒலி என்றே அவற்றை யுணர்ந்து உலகை மறந்து தனிநிலை யடைவர். நமது மகள் நமக் கிவ்வுயரிய நிலையைக் காட்ட வில்லையோ? இனிமையும் மென்மையும் குளிர்ச்சியும் திரட்சியும் வனப்பும் சிவப்பும் மிக்கவாயன்றோ இவ்வுள்ளத்து ஒளி வீசும் செம்மணி விளக்காக மிளிர்கின்றது? இதிலே இனிமை எப்படித் தீற்றினரோ? இத்திரட்சியை எப்படித் திரட்டினரோ? இம்மென் மையை எப்படி இயற்றினரோ? இக்குளிர்ச்சியை எப்படிப் புகுத் தினரோ? இதனுள் சிவப்பினை எப்படி நுழைத்தனரோ என்று இளங்குழவிகளைப்போல இயற்கையன்னையின் எதிரே நின்று போற்றுதல்வேண்டும்.

உயிர் விளக்கம் :—இவ்வுள்ளத்து விளக்கத்தினூடே ஒளிரும் உயிர் விளக்கம் முத்தேபோலப் பல்வடிவம் கொண்டு முளைவிட் டிருக்கின்றது. விலையிலா ஆணிமுத்தமேயாம் ஈது. அதைக் காண்பதே கடவுட்காட்சி. முத்தன்ன பற்களின் அழகினை முறு வலிலே காணலாம். முறுவலோ உயிர் முழுவதும் உவகைவடி வானபோது முறுகி எழுந்தொளிர்கிறது. நகையன்றோ உயிர் விளக்கம்! களங்கமற்ற நகை! காவடமில்லாத நகை! உயிர்க் குள்ளே ஒளிரும் ஒரு முதலை வெளியே காட்டும் ஒப்பிலா நகை! அந்நகையிலன்றோ அருளம்மை கூத்தாடுகின்றாள்? பாத்தையின் பகட்டுநகை யன்று. அருமை மகளின் அன்பு நகையாகும் ஈது. அன்புடைய தாயின் அருள் நகையாகும் ஈது. அத்தகைய உவகை நகை எழுந்தபோது உள்ளமும் பெருவிளக்காக ஒளிர்வதால், சொற்களும் அருட்சுவை சொட்டச் சொட்ட மிகமிகத் தித்திக் கின்றன. ஒலியும் அன்பு கனிந்து குழலினும் யாழினும் மிகமிக இனிதாகின்றது. தோளும் திரண்டு பசந்து பசுமணி விளக்காக ஒளி வீசுகிறது. கண்ணும் கருநிறக் கதிரவன்போல மின்னிப் பொலிகிறது. இடையும் இனிதே துவண்டு அருள்வடிவாகிறது.

கடன்முத்தும் பெண்முத்தும் :—இம்மகளிரிடையே முத்தம் பட்டாற்போல இயற்கைப் பரப்பிலும் முத்தம்படுகிறது. இவ் வாறு மக்களையும் இயற்கையையும் முத்தம்படும் இடங்களாக வைத்துப் புனைந்துரைக்கும் வாயிலாக அவ்விரண்டும் இயைந்து விளங்கும் பொருத்தத்தையும் ஒற்றுமைக் காட்சியையும் நன்கு சுட்டுகின்றார் சேக்கிழார். கடலிலே முத்தம்படுகிறது. நீரோட்ட

மிக்க விலையுயர்ந்த முத்தமே தமிழ்நாட்டிற் பிறப்பன. கடல் என்றால் எங்கும் படுவதில்லை. இத்தமிழ்நாட்டின் பேராறான தண்பொருநை (தாம்பிரபர்ணி), தன் கரைகளை இடித்துக்கொண்டு வெள்ளமாய்ப் பெருகியோடிக் கடலிற் பாய்கின்ற இடத்திலே தான் சிறந்த முத்துக்கள் பிறக்கின்றன. ஆதலின் அம்முத்தும் அந்நாட்டின் வளத்தையே சுட்டுகின்றது. முத்திலே போல அவ் அருள் விளக்கத்தையும் இயற்கையன்னையின் வியத்தகு திறத்தையும் வேறெங்கேனும் காணமுடியுமோ? அஃதன்றோ கடவுட் காட்சி! மகளிரிடை எழும் முத்தோடு கடலிடை எழும் முத்தையும் ஒருங்கு ஒற்றித்து வைத்தெண்ணுதலால் அம்முத்தைப் போன்றே இம்முத்தும் வழிபடற்குரியதன்றி அவாவிற் குரியதன்று என்பது தெளிவாகிறது.

(தொடரும்)

இலுப்பைக்குடி

இங்குள்ள புராதனாலயம் நாட்டுக்கோட்டைச் செட்டிமார்கள் நகரக்கோயில் ஒன்பதில் ஒன்று. இதன் அருகிலுள்ள காட்டில் பூர்வத்தில் கொங்கண முனிவர் வசித்ததாகச் சொல்லப்படுகிறது. அதன் சிதைவுகள் சில இப்போதும் காணப்படுகின்றன. பூமியிலிருந்து எடுக்கப்பட்ட உருவச்சிலைகளில் கொங்கண முனிவரின் உருவம் ஒன்றும் இவ்வாலயத்தில் இருக்கிறது.

தற்போது புகைவண்டி நிலையமாக விளங்கும் காரைக்குடி இணைப்பு இலுப்பைக்குடி கோயில் அருகில்தான் அமைந்துள்ளது. நிலையத்திற்குத் தென்கிழக்கில் ஒன்றரைமைல் தூரத்தில் இலுப்பைக்குடி இருக்கிறது.

இது இயற்கை வளமிகுந்து பல அழகிய தென்னை மரங்கள் சூழ, கோடைகாலத்தில் வசிப்பதற்குத் தகுந்த கிராமமாகும். கோடைகாலத்தில் மிகவும் குளிர்ச்சியாக விளங்குகிறது.

இங்குள்ள வைரவ மூர்த்தி மிகப் பெருமை வாய்ந்தது; பலர் பக்தியாகக் கொண்டாடுவது.

இவ்வாலயத்தில் சித்திரைத்திருநாள் திரு. அ. லெ. குடும்பத்தாரால் சிறப்பாய் நடத்தப் பெறுகிறது. தெப்பத்திருநாளும், ரிஷபக் காட்சியும் சிறப்பாய் நடத்தப் பெறுகிறது.

வரலாற்றுப் பகுதி: History & Biography.

காலஞ்சென்ற உயர்திரு. சுவாமிநாத பண்டிதர்.

[திரு. சே. வே. ஜம்புலிங்கம் பிள்ளை யவர்கள்]

இவர் யாழ்ப்பாணத்து வண்ணார்பண்ணைப் பகுதியைச் சேர்ந்தவர். சின்னத்தம்பிப்பிள்ளை என்பவரின் புதல்வர். வேளாள மரபினர். நாவலர் மருகரும் மாணாக்கரும் மகாவித்துவ சிரோமணியுமாய் விளங்கிய நொத்தாரிஸ் பொன்னம்பலபிள்ளையின் மாணவரில் ஒருவர். சைவபரிபாலனமே தமது பொழுது போக்காகக்கொண்டு அத்துறையில் தமது காலம் முழுவதும் செலவிட்டவர். முப்பது முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் இந்தியாவிற்கு வந்து அதுமுதல் இங்கேயே நின்று தமிழ்நாடெங்கணும் சைவத்தைப் பரப்பி வந்தவர். 1905-ம் ஆண்டில் சென்னையில் சைவ வித்தியானுபாலன அச்சுக்கூடம் ஒன்று நிறுவி அதன் மூலமாகச் சிவஞானபோத மாபாடியம், திருக்கோவையாருண்மை, தேவார அடங்கன்முறை, திருவிளையாடற் புராணம், குமரகுருபரர் பிரபந்தம், சிவப்பிரகாசர் பிரபந்தம் முதலிய சைவப் பெருநூல்களை மிக அழகுபெற, பெரும்பொருள் செலவிட்டு, அச்சிற் பதிப்பித்துச் சொற்பவிலைக்கு விற்று உதவிப் பெரும்புகழ் ஈட்டியவர். சைவத் தொண்டிற்கு உற்றுழி உதவும் பேரீகையுடையவர். சைவசித்தாந்த மகாசமாஜக் கூட்டம் மகாமகக் கூட்டம் முதலிய பெருங் கூட்டங்களைக் கூட்டிச் சரிவர நடாத்தும் போாற்றல் உடையவர். இவர் தலைமையில் கும்பகோணம், திருப்பனந்தாள், மாயூரம் என்னும் திருத்தலங்களில் முறையே 1918, 1919, 1920-ம் வருடங்களில் நடந்த மகாசமாஜ ஆண்டு விழாக்களும், கும்பகோண மகாமககாலங்களில் (1921, 1933) இவர் நடாத்திய சைவப் பெருங்கூட்டமும் அன்னதானம் முதலிய அறங்களும் இவரது பெருமுயற்சியையும், வன்மையையும், அவையஞ்சா ஆண்மையையும் ஒருவாறு புலப்படுத்தும். திருச்செந்தூரிலே சுப்பிரமணிய வித்தியாசாலை யொன்று நிறுவிப் பொருள்

உதவினர். பழைய வரம்பு கடவாத மாண்பினர். மறைகள் நிந்தனை சைவநிந்தனை பொரு மனமுடையவர். வைதிக சைவத்திற்குப் பேரரணாக விளங்கியவர். சைவாசார ஒழுக்கமுடையவர். சிவவேடப் பொலிவழகு அமையப்பெற்றவர். ஆறுமுகநாவலர் மாணாக்கர் பரம்பரையில் வந்தவர். நாவலரைப் போலத் தாமும் வித்தியாதருமம் சைவபரிபாலனம் முதலியன நடாத்தவேண்டுமென்று கருதி அவரைப்போல் குடும்பத் தொடர்பில்லாமல் பல கருமங்களைச் செய்து முடித்தவர். பல நூல்களை எழுதியும் ஆராய்ந்தும் வெளியிட்டவர். பிற்காலத்தில் சிதம்பரத்தைத் தமது இருப்பிடமாகக் கொண்டவர். திருவண்ணாமலைக் கார்த்திகை விளக்கீடும் தில்லைத் திருநடனமும் நியமமாகத்தவருது செய்துவந்தவர்.

இவரது இயற்பெயர் தம்பையாபிள்ளை என்பதாகும். அது இவர் முதன்முதல் அச்சிட்ட திருவாதவூரடிகள் புராணத்தால் அறியலாம்.

இவர் செந்திநாதையர் சேமித்து வைத்திருந்த புத்தகங்களையெல்லாம் பெரும்பொருள் கொடுத்து வாங்கிவைத்திருந்தார். ஒவ்வொன்ருக அரிய சைவ நூல்களை வெளியிடக் கருதியிருந்தனர். சித்தியாருக்கு வெள்ளியம்பலத் தம்பிரான் எழுதிய ஞானவரணப் பேருரையை அச்சிடுவதற்கு ஆராய்ச்சிசெய்து வைத்திருந்தார். சிவஞானபோதமாபாடியம் இரண்டாம்பதிப்புக்குப் பல நுண்மாண் குறிப்புகளும் எழுதிவைத்திருந்தார். வசதிக்குறைவால் இவற்றையெல்லாம் அவர் எண்ணியவாறு முடிக்கக்கூடவில்லை. இது குறித்து அவர் எமக்கு நான்குவருடங்களுக்குமுன் எழுதிய கடிதத்தின் ஒரு பகுதியை ஈண்டு உதகரிக்கின்ரும்:—

"யான் கற்றவர் பிறர்போலச் சுயநலம்பற்றி உழைப்பவனல்லன். எனது ஆயுள் முற்றும் சைவசமய விருத்தி தமிழ்க்சல்வி விருத்தியாகிய பொதுநலத்தின் பொருட்டே கழித்துவருதல் பிரத்தியக்கம். யான் எடுத்துக்கொண்ட ஷெ கருமங்கள் எனக்குப் பின்னும் நடத்தற்கு வேண்டிய காரியங்களைச் செய்யவிடாமல் சைவசமயிகள் யான் சென்ற சென்ற தலங்களில் தங்கள் தங்கள் காரியங்களை முடிப்பித்தலினுல் யான் இதுவரை என் காரியத்தை முற்றுவிக்கக் காலம் வாய்க்கப் பெற்றிலேன். எங்காயினும் பொதுக்காரியத்துக்கு உழைத்துக்கொண்டுதான் இருப்பேன். எல்லாம் சைவதருமந்தானே யென்கின்ற பொது நோக்கமே

அதற்குக் காரணம். இனி அதனைச் சுருக்கி, அச்சிடுகிற வேலையைப் பெருக்க நிச்சயித்தே திருச்செந்தூர் வித்தியாசாலையைப் பூர்த்திசெய்து அதில் வித்தியாரம்பஞ் செய்துகொண்டு விரைவில் வந்து அச்சுவேலையை இடையீடின்றிச் செய்யுங் கருத்துடையனாயினேன். என்னை? அது செய்யாது அச்சுவேலையைத் தொடங்கின் அது பின்னும் நெடுங்காலம் கிடந்துவிடுமாகலான். பிரமஸ்ரீ செந்திநாதையரவர்களிடமிருந்து பெற்ற அரிய பெரிய இன்றியமையாத சைவசமய நூல்கள் அநேகமிருக்கின்றன. கொண்டுவந்து காட்டுவேன். அவைகளை அச்சிடுதற்கு இக்காலம் பொருளுபகரிப்பாரில்லை. ஆதலால் அச்சியந்திர வருவாய்கொண்டே அச்சிடவேண்டும். ஆதலால், பலர்க்கும் பயன்படும் அந்நூல்களை எனக்கு உதவியாயிருந்து அச்சிடுவித்துப் பயன்படுத்திப் புண்ணியம் புகழ்களை அடையவேண்டியது தங்கள் கடமையாகும்.''

தருமபுர ஆதீனத்துப் பண்டார சந்நிதிகள் இவர்மாட்டுப் பெருமதிப்புவைத்து வித்வ சிரோமணி என்ற பட்டமளித்துப் பாராட்டியுள்ளனர். இவரது பார்வையிலேயே அம்மடத்துப் பிரசுரங்களெல்லாம் வெளியாயின. இறக்குந் தருணத்தில் முத்தி நிச்சயச் சிற்றுரை அச்சாகி வந்தது. கடைசிவரையில் நூல் அவரால் பார்வையிடப்படும் பாக்கியத்தைப்பெற்றது.

தனக்கெனவாழாப் பெற்றியாளராகிய இப்பெரியார் மேற்கொண்ட கருமங்களை முற்றுப்பெறச் செய்வது சைவசமயிகளுக்குப் பெருங்கடனும்.

காழிக்கண்ணுடைய வள்ளலார்

[திரு. ப. அ. முத்துத்தாண்டவராயபிள்ளை அவர்கள்]

(டு-ம்சிலம்பு, ௧௧-ம் பரல், ௪௯௯-ம் பக்கத் தொடர்ச்சி)

(ரு) கண்ணுடையார் அவதார மகிமையும், அன்னாரைப் பற்றிக் கர்ணபரம்பரையில் வழங்கிவரும் கதைகளும். திருவருட்பிரகாச வள்ளலார், வள்ளல் என்று தொடங்கும் திருவெண்பாவிற்கு எழுதிய விருத்தியுரையும் திருப்போரூர்ச் சிதம்பர சுவாமிகள் எழுதிய ஒழிவிலொடுக்க உரையும் அனவரத விநாயகம் பிள்ளை முதலிய பெரியோர்கள் எழுதிய முகவுரையும், பிறசான்றோர் கூறிவரும் ஐதிக உரையும், நோக்குக.

மறைமுடிவாம் பெரும்பொருளும் வயங்குமா கமமுடியும்
உறைதருமாற் கைலையென வுரைத்துமலங் கழுவுதற்கே
யறைகெழுபா சந்தவிர்க்க வவ தரித்த வப்புருடன்
கறைகடியுங் கடற்காழிக் கண்ணுடைய வள்ளலே.

(சு) கண்ணுடைய வள்ளலாரது ஞானனுபவ விலாசப் பிரகாசம். வேதமுடிபின் கண்ணும், ஆகம முடிபின்கண்ணும், விளங்கும் சிவானுபவ நிலையில் நிற்குந் தன்மையை ஒழிவி லொடுக்க முதலிய நூல்களில் கூறுமாற்ருற் கண்டுணர்க. சிவா நந்த மாலையினும் இவ்வுண்மை பெறப்படும்.

அடைகொண்டு மலர்கொண்டு மகங்கொண்ட நிறைகொண்டும்
விடைகொண்ட பெருமானை விமலஞா னங் கொண்டும்
மிடைகொண்ட வானந்த மேவியநங் குருவென்ப
கடைகொண்ட கடற்காழிக் கண்ணுடைய வள்ளலே.

(எ) வள்ளலார் லோக சங்கிரகமும் தீக்ஷாக்கிரமமும். அணைந் தோர் தம்மை முற்றிய நம் பெருமான் தமிழ் மண்டல முற்றுஞ் சென்று ஞானசரியை முதலிய நான்கு நிலையையும் விளக்கி, குருபத்ததி மூலமாகப் பக்குவிகளுக்கு உபதேசித்துவந்த வரலாற்றைக் கேட்டுணர்க.

பெருந்தகைய உலகெங்கும் பேசரிய கலைமலிய
விருந்தசிவ தீக்கைநெறி யிருநிலத்தோர் கொளவிரும்பப்
பொருந்துசிவ ஞானகுரு புங்கவனய் நிற்கின்றன்
கருந்தடங்கொள் கடற்காழிக் கண்ணுடைய வள்ளலே.

(அ) கண்ணுடைய வள்ளல் ஞான நூல்களை அருளிச்செய்து ஞானசாரிய பரம்பரைக்குத் தாபனசாரியாராக ஆயது. இவ்வியாசத் தின் முற்பகுதிகளிலும் நியதிப்பயன் முகவுரையிலும் காண்க.

" தீதாக நன்றகுஞ் சிவலிங்க பூசைமுதல்
ஆதார கலையாக வவனியுளா ரோதுதற்கு
மீதாகு நூலியற்றி விளங்குமெங் கன்மவினை
காதாரக் கடற்காழிக் கண்ணுடைய வள்ளலே.

(கூ) கண்ணுடைய வள்ளலாரது ஞான நூல்களின் ஆராய்ச் சியும் அவற்றிற்கு உரைவந்த வரலாறும். சிதம்பரசுவாமிகள் சரித் திரத்தாலும் இராமலிங்கசுவாமிகள் வரலாற்ருலும் இவை உணரப் படும்.

பண்தழுவு மெய்ப்பாட்டின் பயனுணரப் போரூரான்
பெண்தழுவு பாசத்தான் பேரருளாலுரை வழங்க
எண்தழுவு மெழுத்தாகி யியலாகி யியைந்தனனல்
கண்தழுவு கடற்காழிக் கண்ணுடைய வள்ளலே.

(ய) கண்ணுடைய வள்ளலார் திக்குவிஜயம் செய்து அனுக்கிரகித்தது. இஃது இவ் வியாசத்தின் முற்பகுதியிற் காட்டப்பட்டது.

பாலுயரும் ஆப்பொழியும் பாண்டிவள நாடுபொழில்
மேலுயருங் குயின்முழங்கும் வெஞ்சிலைக்கே ரளநாடு
சாலுயரு மணிமிளிருந் தண்டகநா டிவைபுரந்தான்
காலுயருங் கடற்காழிக் கண்ணுடைய வள்ளலே.

(கக) திருஞானசம்பந்தக் கண்ணுடைய வள்ளல் காழியிற் பரிபூரணமடைந்ததும், அவரது திருமட வரலாறும், அவரை ஆங்குப் பூசிக்கும் கிரமமும், அன்னரை வழிபடும் முறையும், அதனல் எய்தும் பயனும். இவற்றைச் சாத்திரவாயிலானும், அனுபவ வாயிலானும் உணர்ந்து கொள்க.

பாதலத்த மீதலமும் பரவுபூ தலத்தோணி
யாதலத்த சம்பந்த னருளொளியா னவன்கண்டீர்
வாதலத்த துறைவாழ வந்துதிரு வவதரித்தோன்
காதலத்த கடற்காழிக் கண்ணுடைய வள்ளலே.

இவ்வாறு கண்ணுடைய வள்ளலாரது வரலாற்றைச் சுருக்கி வரைந்து அவரது உண்மைஞான அனுபவத்தை உணரும் வண்ணம் அப்பெருமானர் அவதரித்த ஸ்ரீகாழியம்பதியைத் துதிசெய்வோமாக.

“முப்பழம் பொருட்கு முதற்பரம் பொருளாய்
மூவர்க்கு முதல்வனுய் மூளைத்துக்
கப்புவிட் டிலகுங் கருத்தினை விளக்குங்
கண்ணுடை வள்ளனற் பதிதா
னப்பிடை மலர்ந்த சலசமு மடவா
ரானனங் களும்வயங் குறலாற்
றுப்புறழ் செங்கா லோதிமம் வயங்குந்
தூயநற் காழிவா ழியவே.”

இலக்கணமும் இலக்கியமும்
Language & Literature

தமிழகம்

[திரு. S. நடராஜன் அவர்கள் B. A.]

(முன் உசுஉ-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழகத்தின் முதற் கடல்கோளும் தலைச்சங்கமும்

23. தமிழகம் கடல்வாய்ப்படுமுன் தமிழர் உலகியற்றுறையிலும் ஆன்ம உணர்ச்சிற்றுறையிலும் சிறந்த நாகரிகம் பெற்று மொழி வளர்ச்சிக்காகச் சங்கங்கள் நிறுவியு மிருந்தார்கள். தமிழகத்திற்கு நிகழ்ந்த முதற் கடற்கோள் ஸ்காட் எலியெட் கூறும் ஐந்தாம் பெரு வெள்ளக்காலத்தில்தான் நிகழ்ந்திருக்கவேண்டும். ஆதலால் தலைச்சங்ககாலம் இற்றைக்கு 9500 ஆண்டுகட்கு முன்னர் எனல் வேண்டும். இக்காலத்தில், இமயமலை, சிந்துகங்கைச் சமவெளி, பாரசீகம் முதலிய நாடுகள் கடலுள் இருந்தனவென்பதையும், இதன்பின்னரே நிலப்பரப்பு இப்போதைய வடிவெய்திய தென்பதையும் ஞாபகமூட்டுகிறேன்.

24. இற்றைக்கு 9,500 ஆண்டுகட்கு முன்னரே இருந்த தலைச்சங்கம், ஏறக்குறைய 4500 ஆண்டுகள் நிலைந்து 89 அரசர்கள் தொடர்ந்த ஆட்சியில் நடைபெற்றதாக இறையனுர் அகப்பொருளில் காண்கிறோம். இச் சங்கம் நிறுவிய முதல் மன்னன் காய்சின வழுதி யென்றும் இறுதி மன்னன் கடுங்கோன் என்றும் கூறப்பட்டுள்ளன. சங்கமிருந்தார் 549 தின்மர் என்பர். ஆனல், அவர்கள் யாவரும் ஒரே காலத்தவர் எனக் கூறமுடியாது. இக்காலத்தில் செந்தமிழ்நாடென்னும் சிறப்புப் பெயர் பெற்ற பாண்டிநாடு குமரியாறு முதல் பஃறுளி ஆறுவரை 49 நாடுகளாக 700 காவத தூரம் பரவியிருந்திருக்கின்றது. குமரியாற்றிற்கு வடக்கே விந்தியமலைவரை சேரர் சோழர் இருந்திருத்தல் வேண்டும்.

25. † செங்கோன்றரைச் செலவு என்னும் நூல் தலைச்சங்க காலத்தில் குமரியாற்றிற்கும், பஃறுளி ஆற்றிற்கும் இடையேயுள்ள பெருவள நாட்டரசனை முதல் ஊழித் தனியூர்ச்சேந்தன் பாடினதாகக் கூறுகிறது. இப்பொழுது வெளியிடப்பட்டிருக்கும் சங்கநூல்களிற் புறநானூற்றிலுள்ள சில செய்யுட்கள் வெகு தொன்மையானவை யெனக் கருதப்படுகின்றன. பண்டைப் பாவலர்கள் புரவலர்களை வாழ்த்தும்போது அவனுடைய நாட்டின் பெரும் ஆற்றின் மணலினும் நீண்டநாள் வாழக்கடவன் என வாழ்த்துதல் மரபு—

"சிறக்கநின்னாயுள்
மிக்குவரு மின்னீர்க்காவிரி
எக்கரிட்ட மணலினும் பலவே" (புறம் 43.)

"மண்ணாள் வேந்தே நின்வாணாட்கள்
தண்ணார் பொருநை மணலினுஞ் சிறக்க" சிலப்பதிகாரம்.

இம்மரபை ஒட்டிப் பாண்டியனை வழுத்தும் புலவர் பஃறுளிமணலைச்சுட்டிக்காட்டுதல் தலைச்சங்க காலத்தில் பஃறுளி இருந்தமையைக்காட்டுகிறது.

"எங்கோவாழிய குடுமிதங்கோச் சென்னீர் பசும்பொன்
வயிரியர்க்கீத்தமுன்னீர் விழவின்நெடியோன்
நன்னீர் பஃறுளி மணலினும் பலவே" (புறம் 9.)

என, பாண்டியனையும் பஃறுளியையும் குறித்தமை காண்க. "கடல் பொருது முன்னொருகாலத்து அவனது (பாண்டியனது) தென்றிசைக்கண்ணதாகிய பஃறுளியாற்றுடனே பலவாகிய பக்கமலைகளை உடைய குமரிக்கோட்டையும் கொண்டதனால்"; 'அங்கனமாகிய நிலக்குறைக்கு சோழநாட்டெல்லையிலே முத்தூர்க்கூற்றமும், சேரநாட்டுக் குண்டூர் கூற்றமும், என்னும் இவற்றை

---

†"செங்கோன்றரைச் செலவைச் சேந்தன் றனியூரான்
துங்கன் றமிழ்த்தாப் புலித்தொடரா- -லங்கிசைத்தான்
சக்கரக்கோ முன்னின்று சாற்றும் பெருவூழி
யக்கரக்கோ நாமஞ்சு வாம்."

பஃறுளியாற்றுத் தலைப்பாய்ச்சல் ஏழ்தெங்கநாட்டு
முத்தூர் அகத்தியன்.

—தமிழ்மொழியின் வரலாறு
வி. கோ. சூ.

இழந்த நாட்டிற்காக" வென்று ஆண்டா னென்பது பின்வரும் செய்யுள்களால் அறியக் கிடக்கின்றது.

"மலிதிரை யூர்ந்துதன் மண்கடல் வௌவலின்
மெலிவின்றி மேற்சென்று மேவார்நாடிடம்பட
புலியொடு விண்ணீக்கிப் புகழ்பொறித்த கிளர்கொண்டை
வலியினன் வணங்கிய வாடாச்சீர்த் தென்னவன்.

(முல்லைக்கலி 4.)

"வடிவே லெறிந்த வான்பகை பொறாது
பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு
தென்றிசை யாண்ட தென்னவன் வாழி

(சிலப்பதிகாரம்.)

26. இதுகாறும் கூறியவாற்றால் முதற் கடற்கோளின் பல னுய்ப பஃறுளியாறுவரை யிருந்த நாடு பாண்டியனது எனவும் குமரிக்கு வடக்கே சேரசோழர் ஆண்டதும் பெறப்படுகிறது.

தமிழர் புதுநிலப் பரப்பிற்கேகல்

27. தமிழகத்தின் தென்பாகம் கடல்வாய்ப் பட்டதின் பின்னரும், சிந்துகங்கைச் சமவெளி தோன்றும் முன்னரும் நந்தமிழ் நாடு தீவாய் இருந்திருத்தல் வேண்டும். இக்காலத்தேதான் இதற்கு நாவலந்தீவு எனப் பெயர் வந்தது போலும். சிந்துகங்கைச் சமவெளி தோன்றியதும், முதல்முதல் அதில் குடியேறினவர் தமிழரேயாவர். தமிழர்கள் கடல் மூலமாகவும் தரை மூலமாகவும் பாரசீகம், பாலஸ்தீனம், எகிப்து முதலிய புதுநிலப் பரப்புகளுக்குச் சென்றனர். அக்கேடியர், சாலடியர், எகிப்தியர், முதலியோரும் அவர்கள் இனத்தைச் சார்ந்தோரும் தமிழரேயாவர். இஃது அவர்களின் பண்டைக்கால பழக்க வழக்கங்களிலிருந்து விளங்குகிறது. வி. ஜே. தம்பிப்பிள்ளை யென்பார், தமிழர் எகிப்தியர்களது சிற்பக்கலைகள் ஒரேதன்மையன வென்றும், மதுரையிலுள்ள சிவாலயமும், ஜெருசலேம், எகிப்து முதலிய இடங்களிலுள்ள ஆலயங்களும் ஒற்றுமையுடையன வென்றும், நினேவாவின் ஆலயத்தும் தென்னிந்திய ஆலயங்களிலும் நந்தி காணப்படுகிறதென்றும் சிவபெருமானே

(Zorastrians) சாஸ்தியருடைய ஜெஹோவா என்றும் கூறுகிறார். எனவே தமிழர்கள் புதுநிலப் பரப்பில் முதலில் குடியேறின ரெனவும் குடியேறும்போது சிவனை வழிபடுவோ ராயிருந்தன ரென்பதும் பெறப்படுகிறது.

வடநாட்டார் தென்றிசை நகர்தல்

28. இமயமலை முதலிய புதுநிலப் பரப்புத் தோன்றவும் வட பாகத்திருந்த ஆரிய வகுப்பினர் தென்முக நோக்கி வந்தனர். ஆகவே, புது நிலப்பரப்பில் இருபெருஞ் சாதியாரும் எதிர்த்துப் பொருதநேரிட்டது. இவ்வாறு, தங்கள் தாயகத்தை விட்டுப்புறப் பட்ட ஆரியர்கள் மேற்கேயும் தெற்கேயும் கூட்டங்கூட்டமாய்ச் சென்றார்கள். மேற்கே சென்றவர்கள்தான் தற்காலத்திய ஐரோப் பியர்கள். தென்றிசை வந்த ஆரியக் குழுவினர் சிந்துகங்கைச் சமவெளியடைந்து ஆங்குள்ள தமிழருடன் கலந்தனர். இக்காலம், தமிழகம் முதற்கடற்கோள் பட்டபின்னரும், இரண்டாம் கடற் கோள் படுமுன்னரேயுமாம். இக்காலத்தில் தமிழர்களின் தாய் நாட்டெல்லை இமயமுதல் குமரியாறு ஈறாக இருந்தது.

(தொடரும்)

கன்னனும் கும்பகர்ணனும்

(பண்டிதர் திரு. மா. இராசமாணிக்கம் அவர்கள்)

கன்னன் வரலாற்றைப் பாரதத்தில் காணலாம். கும்ப கர்ணன் வரலாற்றை இராமகாதையில் பார்க்கலாம். இருவேறு நூல்களில் உள்ளவர்களை யாம் இங்கு அவர்கள் குணநலங்களைக் கொண்டு ஒன்று சேர்க்க முயல்வதே இக்கட்டுரையின் கருத் தாகும்.

கன்னன் இயற்கையில் நல்லவன். அரவக் கொடியோன் தன்னை ஆதரித்து வந்தமையால் அவன் எண்ணப்படியே இவன் நடந்துவந்தான். ஆனால், உண்மை, நியாயம், செய்ந் நன்றியறிதல் முதலிய உயரிய குணங்கள் அவனிடம் ஒளிர்ந்தன. கும்பகர் ணனை அரக்கன் என்றும் ஆறுமாதகாலம் தூங்குபவன் என்றும் ஆபாசப் படுத்திக் கதை எழுதி விட்டனரேயன்றி, உண்மையில் கும்பகர்ணன், உயரிய குணநலமும் ஒழுக்கமும் வாய்ந்த 'தமிழன்' என்பதை இக்காலத் தறிஞர் அறிவர். கம்பர் இதனை அறிந்தோ

அறியாமலோ, இராமனிடம் கொண்ட கரைகடந்த அன்பாலோ, வால்மீகிக் கூற்றைப் பின்பற்ற வேண்டும் என்று எண்ணியோ, இராவணனையும் அவனது உறவினரையும் அரக்கராக அமைத்து விட்டனர். முதல்நூலும் வழிநூலும் அரக்கன் என்று கூறுவனவேயன்றி அறிவுடைமக்கள் அரக்கர் எனக் கொள்ளார். நிற்க,

கன்னன் கதையை அறியாதார் இலர். ஆதலின் ஈண்டு வேண்டிய பகுதியை மட்டும் வரைகுவம். கண்ணன் துரியோதனனிடம் தூதனாகச் சென்றபோது, கன்னன் குந்தியின் மைந்தன் என்னும் உண்மையைக் குந்திக்கு அறிவித்து, அவனைப் பாண்டவருடன் சேர்க்கும்படி கூறினான். குந்தி, கன்னனிடம் சென்று தான் அவன் அன்னை என்பதை மெய்ப்பித்தாள். பின்னர், குந்தி, மைந்தனைப் பாண்டவருடன் சேருமாறு வற்புறுத்தினாள். இவ்விடத்தேதான் கன்னனது உயரிய குணம் ஒளிர்வது. அம்மையின் மொழி கேட்ட மைந்தன். "அம்மே! பெற்றோர் இன்னார் என்று அறியாதிருந்த என்னைத் தன் உற்ற நண்பனாகக் கொண்டான் அரவக் கொடியோன்; சீரும் சிறப்பும் தனது பெருவாழ்வும் எனக்கே யளித்தான். என்னுடன் உண்டான்; என் எச்சில் என்னோடு உண்டான்; என்னை அங்க நாட்டிற்கு அரசன் ஆக்கினான்; தன் தம்பியரையும் சுற்றத்தாரையும் என்னடி வணங்குமாறு செய்தான். மற்றும் ஓர் செய்திகூறுவல். ஒருநாள் அந்தப்புரத்தில் யானும் அவன் மனைவியும் தனித்திருந்து சொக்கட்டான் ஆடினேம்; அவ்வமயம் துரியோதனன் என் பின்புறத்தில் வந்தான். அதை யான் காணவில்லை, எதிர்ப்புறத்தே யிருந்த அவன் மனைவி கண்டாள்; உடனே எழுந்தாள். அவள் எழுந்த காரணத்தை அறியாத யான் அவளை உட்காரச் செய்ய, அவளது மேலாடையைப் பற்றினேன். அவ்வளவில் அவளது மணிமாலை இற்று வீழ்ந்தது. மணிகள் கீழே சிதறின. அந்நிலையில் அவள் கணவன் புன்சிரிப்புடன் என்முன் வந்து நின்றான். அவனைக் கண்ணுற்ற யான் என் பிழையை நினைத்து அயர்ந்தேன்; செய்வது அறியாது விழித்தேன். அப்போது அவன், 'அண்ணா! இம்மணிகளைக் கோக்கவோ, அல்லது பொறுக்கவோ' என்றான். அதாவது, 'நான் கோக்கவோ அல்லது இம்மணிகளைப் பொறுக்கவோ' என்பது பொருள். என்மீது எள்ளளவும் சந்தேகம் கொள்ளாத அப்பரந்த நோக்கமுடையானது மனப் பான்மையை அப்போதே

யான் அறிந்தேன். அம்மா! இத்தகைய அரசனுக்கு யான் எவ்வாறு துரோகம் செய்வேன்? எங்ஙனம் அவன் செய்த நன்றியை மறப்பேன்? அங்ஙனம் யான் வரமாட்டேன். அவனது செஞ்சோற்றுக் கடன் கழிப்பதுவே எனக்கினிப் புகழும் கருமமும் ஆகும்,'' என்றான். இந்நிலையைப் பாரதம் பாடிய பெருந்தேவனார் அழகுபடக் கூறியுள்ளதைக் கண்டு மகிழ்க:

"மதமா மதக்களிற்றான் மற்றெனக்குச் செய்த
உதவி யுலகறியு மன்றே—உதவிதனை
நன்றுசெய்தோர் தங்களுக்கு நானிலத்தில் நல்லோர்கள்
குன்றுவதோ செய்ந்நன்றி கூறு.

நன்றாக மன்னன் எனக்கிந்த நாடறிய
குன்றாத நன்மை பலகொடுத்தான் என்றாலும்
ஈண்டவன் செய்த வுதவியினை யான்மறந்தால்
தீண்டுவளோ தாமரையாள் தேர்ந்து.

மைத்தடங்கண் மாதேவி வார்துகிலை யான்பிடிப்ப
அற்று விழுந்த அராமணிகள்- மற்றவற்றைக்
கோக்கேனோ வென்றுரைத்த கொற்றவர்க்கெ னுருயிரைப்
போக்கேனோ வெஞ்சமத்துப் புக்கு"

பாரதம் பாடிய வில்லிபுத்தூராழ்வாரும்,

"திடம்படுத் திடுவேலி ராஜரா ஜனுக்குச்
செருமுனைச் சென்றுசெஞ் சோற்றுக்
கடன் கழிப்பதுவே எனக்கினிப்புகழுங்
கருமமும் தருமமும் என்றான்,"

எனக் கூறி மகிழ்ந்தார்.

எனவே, கன்னன் வீர பராக்கிரமம் வாய்ந்த பாண்டவர் தன் தம்பியர் என்பதை அறிந்தும், அவர்களைச் சேர்வதால் தான் புவியரசாகலாம் என்பதை அறிந்தும், அந்த அற்ப ஆசையைச் சிறிதும் கொள்ளாது, நன்றி மறவாச் செயலையே சிறந்ததாகக் கொண்டான் என்பது பெறப்படுகின்ற தன்றோ? இத்தகைய சிறந்த குணமே மக்களிடம் வேரூன்றி இருக்க வேண்டியது. இக்கன்னனே போர்க்களத்தில் கண்ணன் தரிசனத்தைக் கண்ணுற்றபோது, 'செஞ்சோற்றுக்கடன் கழித்தேன்' எனக் கூறிக் களித்தான்.

(தொடரும்)

தமிழ்மொழியின் ஒலிகளும் எழுத்தும்

[ஈப்போ, திரு. தியாகராயன் அவர்கள்]

(முன் ௨௬௪-ம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கூறியவாறே இன + எழுத்து என்னும் சொற்களிடையே வகர ஒற்றைப் புகுத்தொலிக்க 'இனவெழுத்'தெனப் புணர்ந்தொலிக்கும். இவ்வாறு யகர ஒற்றும், வகர ஒற்றும் உடம்படு மெய்களாயின.

அன்றியும் மெய் இயல உயிரொலி ஒன்றி இடங்கொடுப்பது போல இவ்வுடம்படு மெய்களிரண்டும் ஈருயி ரொலிகள் புணர்ந்தியங்க இடங்கொடுப்பதால் உயிரின்தன்மையைக் கொஞ்சமுடைத்தாம்.

மேற்கூறியவாறு யகரமெய்க்கு இகர உயிர் ஒலி சம்பந்தமுடையதால், யி, யீ, யெ, யே, யை என்னும் உயிர்மெய்கள் மொழிக்கு முதலில் வாரா. ஏனெனில் தன்னிடத்தே இகர உயிரொலிப் பற்றுடையதால் அவ் இகரஒலி யியங்கும் இ, ஈ, எ, ஏ, ஐ என்னும் ஐந்துயிர்களையும் தவிர்த்து, இகரப்பற்றில்லாத மற்ற உயிர்களோடு புணர்ந்து மொழி முதலில் வருவதாகும்.

மேலும், இகர ஒலியியங்கும் உயிர்களொடு புணர்ந்து மொழி முதல்வரின், ஈருயிர் மொழிமுதலில் வருங் குற்றமேற்படும்.

ஆகையால், " அ, ஆ, உ, ஊ, ஒ, ஔ யம் முதல்" என சூத்திரம் விதித்தார்.

(புவணந்தி, எழு. சூ. 103)

இதுபோலவே வகர ஒற்றும் உகர உயிரொலியுடன் பற்றுடையதால், அவ்வுயிரொலி யியங்கும் உ, ஊ, ஒ, ஓ, அல்லாத பிற உயிரொலியொடு புணர்ந்து மொழிமுதலில் வரும்.

"உ, ஊ, ஒ, ஓ வலவொடு வம் முதல்"

என்னும் விதியைக் காண்க. (பவணந்தி, எழு. 102)

'வெளவுதல்' என்பது போன்ற சொற்களில் வகர ஒற்றானது, உகர ஒலியுடன் இயங்கும் ஔகார உயிருடன் புணர்ந்து மொழிக்கு முதலில் வந்தது. இது நான் முற்கூறிய காரணங்களுக்கு முரணுகும். யகர மெய்க்குக் கூறிய சூத்திரத்தில் இகர உயிரொலியுடைய ஐகாரத்தை நீக்கியதுபோல் இவ்விதியிலும் உகர

உயிரொலியுடைய ஔகாரத்தை நீக்குவதே பொருந்தும். எனவே வௌவுதல் என்னும் சொல்லை 'வவ்வுதல்' என எழுதுவதே சரி.

இம்முறையில் இவ்விரண்டு மெய்களிலும் உயிர்களின் இயக்கம் நன்குவிளங்க, ஆங்கில W, Y என்னும் எழுத்துக்களைப்போல் 'வ்,' 'ய்' என்பன அரையுயிர்களென நிறுவப்பட்டன. மேலும், Dr. Waddell என்பார் "எழுத்தின் பிறப்பு" என்னும் நூலில் (J, V, Y) என்னும் எழுத்துகள் பிற்காலத்தில் ஐரோப்பிய மொழிகளில் புகுக்கப்பட்டன வெனவும், அவ்வாறு பின் புகுக்கப்பட்ட V என்னும் எழுத்து F என்னுமெழுத்தின் வேற்றுெலிக்குறிப்பெனவும், அவ் V யானது உகர உயிரின் மெய்யொலியெனவுங் காட்டியுள்ளார். எனவே இவ் V என்னும் எழுத்து புகுக்கப்படுமுன் உகரத்தின் மெய்யொலியாய் வழங்கியது W என்னும் எழுத்தே. இந்த W என்னும் எழுத்து உ, ஊ போல ஒலிப்பதை (Websters) அகராதியில் விரிவாக எடுத்துரைக்கப்பட்டிருக்கிறது. (A Guide to Pronounciation ; rules 256 and 257.)

இதனால் W என்பது தமிழ் வகர ஒற்றுப்போல் ஒலிப்பதென நிறுவப்பட்டது.

யகர மெய் Y என்னும் ஆங்கில எழுத்தைப்போன்றதென்பதற்கு அத்தாட்சியாக (Yard, Yes, Yore, Usury) என்னுஞ் சொற்களை ஒலித்துப்பார்க்கவும். அன்றியும் மேற்கூறிய சொற்களிலுள்ள யகர ஒலிகள் British Academy யின் விதிப்படி பிறமொழிகளை ஆங்கில எழுத்தில் மாற்றி எழுதுங்கால் யகர ஒலிகளாகவே, Ya, Ye, Yo, Yu என்பவைபோல் குறிக்கிறார்கள்.

ஆகையால் இவ்வாராய்ச்சியால் நிலைவதென்னெனின் பின் குறித்துள்ள ஓசைகளுக் கேற்ற குறிக ளமைக்கப்பட வேண்டுமென்பதாம்.

கசரத்தின் மெல்லோசை　Ga
சகரத்தின் மெல்லோசை　Z
டகரத்தின் மெல்லோசை　Da
தகரத்தின் மெல்லோசை　Tha as in this
பகரத்தின் மெல்லோசை　Ba
வகரத்தின் வேற்றுெலியாகிய Fa

ழகரத்தின் வேற்ருெலியாகிய Za as in vision, azure
றகரத்தின் மெல்லோசை ru as in கன்று
செய்பவன் என்னுஞ் சொல்லிலுள்ள பகரவோசை.

கடைசியில் குறித்த றகர பகரங்களின் வேற்ருேசைகளைக் காட்ட இடையின ரகாமும் பகரத்தின் மெல்லோசைக்குறியும் போதுமெனத் தோன்றுகிறது. அன்றியும் பிறமொழிகளில் இவ்வெழுத்துக்களைப் பயன்படுத்துவதால் நம் இலக்கண விதிகளோடு முரண்படா. ஆகையால் 7 மெய்யொலிகளுக்கே ஏற்ற குறிகள் புதிதாய் அமைக்கவேண்டும்.

Scripts to represent the above new Sounds

இப் புத்தோசைகளைக் குறிக்க எழுத்துக்கள் எவ்வாருக வேண்டுமென ஆராய்வோம்

சில ஆண்டுகளுக்குமுன் Mr. J. Knowles (53 Paikgate Road, Chester) என்பவர் Bengalee பத்திரிகையின் பத்திராதிபருக்கு ஓர் கடிதம் எழுதியிருந்தார். அவ்வியாசம் "Simplifying Vernacular Scripts' என்னும் தலைப்புடன் அப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டது. அவ்வியாசத்திலிருந்து இக்கட்டுரைக்கு வேண்டிய சிலவற்றை எடுத்துக் காட்டுகிறேன்.

"A complete faunt of Nagari (Sanskrit) types has up to 1000 different 'sorts.' Looking at a Sanskrit Grammar we find that over and above the primary letters, the medial vowel signs, anuswara and other characters there are 215 conjunctions of two consonants, 136 conjunctions of three consonants, 27 of four consonants and 6 of five consonants. Then there are the multitudinous combinations of conjunct consonants with medial vowel signs. One way and another the combination of symbols for 14 vowels and 33 simple consonants amount up to a thousand different characters." After dealing similarly with Oriya, Malayalam etc., he states:—

"Now there is one vernacular which, somehow sometimes, has effected a very considerable simplifica-

tion. The Tamil script can be printed with 150 different conjunct consonant characters, a double consonant is just the same twice over, conjunct consonant is just the consonants one after the other without any change or form. This has done away with the necessity of many hundreds of types for conjunct consonants and final letter forms. (And ends with this query) Could the other vernaculars adopt the Tamil method?"

It is a far call indeed from over 1,000 to 150 types.

எனவே நம்மொழியின் எழுத்துக்கள் ஒலிகளைக் குறிக்கப் போதாமல் தடுமாறவுமில்லை அல்லது வடமொழியைப்போல் அளவுக்கு மிகுந்த வீண் எழுத்துக்களைப் புகுத்தித் திண்டாடவு மில்லை.

நால்வகைக் காண்பதறிவு

1. எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. (குறள் 355)

2. பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னுஞ்
செம்பொருள் காண்ப தறிவு. (குறள் 358)

3. எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. (குறள் 423)

4. எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு. (குறள் 424)

1. யாதொரு பொருள் யாதோரியல்பிற்றாய்த் தோன்றி னும், அத்தோன்றிய வாற்றைக் கண்டொழியாது அப்பொருளின் கணின்று மெய்யாகிய பொருளைக் காண்பதே, மெய்யுணர்வு.

2. பிறப்பிற்கு முதற்காரணமாய அவிச்சை கெட, வீட் டிற்கு நிமித்த காரணமாய செவ்விய பொருளைக் காண்பதே ஒரு வர்க்கு மெய்யுணர்வு.

3. யாதொருபொருளை யாவர்யாவர் சொல்லக் கேட்பினும், அப்பொருளின் மெய்யாய, பயனைக் காணவல்லது அறிவு.

4. தான் சொல்லும் சொற்களை, அரிய பொருளவாயினும், கேட்பார்க்கு எளிய பொருளவாமாறு, மனங்கொளச் சொல்லி, பிறர்வாய்க் கேட்குஞ் சொற்களின் நுண்ணிய பொருள் காண வரிதாயினும், அதனைக் காணவல்லது அறிவு.

ஒரத்தி. எம். முனிசாமி ஆச்சாரி.

அறிவியற் பகுதி - Science

ஒளி நூல் வரலாறு—(Astronomy)

[திரு. இ. மு. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள்]

(முன் உ௯௫-ம் பக்கத் தொடர்ச்சி)

கணிதத்தின் பயனுக மக்களுக்குப் பயன் பெறுமாறு வெளி வருவது பஞ்சாங்கமே. பஞ்சாங்கம் என்பது ஐந்து அங்கமாம். அவையாவன:— க. கிழமை, உ. திதி, ௩. நாள் ௪. யோகம், ௫. கரணம் என்பன. இங்ஙனமாக ஐந்து உறுப்புக்களோடு கணி தப்பயன் வெளிவந்து இற்றைக்கு நூறு ஆண்டுகளே ஆயின. அதன் முன்னர் இது திரியாங்கம் என்ற பெயரோடு க. கிழமை, உ. திதி, ௩. நாள் ஆகிய மூன்று உறுப்புக்களோடு ஏடுகளில் குறித்து வைக்கப்பட்டு வந்தது. அதில் கோள்களின் பெயர்ச்சி யும், மறைவு (கிரகணம்) களும் வெளியிடப் பெற்றன.

அச்சுவாகனம் தோன்றியபின், இற்றைக்கு நூற்றிருபத் தைந்து ஆண்டுகளின் முன்னர் யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை, மயில்வாகனம் பிள்ளை என்பாரின் மகனர் திரு. சோமசேகரம் பிள்ளை என்பார் திரியாங்கம் கணித்து முதன்முதலாக அச்சியற்றி வெளிப்படுத்தினர். அவருக்கு அச்செயலில் பெருந்துணை புரிந்து ஆதரித்தவர்கள் கிறிஸ்தவ சங்கத்தார்.

திரியாங்கம் அச்சாகி வெளிவந்த இருபத்தைந்து ஆண்டுகளின் பின்னரே பஞ்சாங்கம் தோன்றிற்று. யாழ்ப்பாணம் பஞ்சாங்கம், திருநெல்வேலிப் பஞ்சாங்கம், கருங்குளம் பஞ்சாங்கம், இராமநாத புரம் பஞ்சாங்கம், ஆர்க்காட்டுப் பஞ்சாங்கம் முதலியன இற் றைக்கு ஐம்பது அறுபது ஆண்டுகளின் முன்னரிருந்தே வெளி யிடப் பெறுகின்றன. இப்பஞ்சாங்கங்களெல்லாம் பழைய வழி களைப் பின்பற்றி வெளி வருவனவாய் ஒவ்வொன்றிலும் பல மாறுபாடுடையனவா யிருக்கின்றன.

இதனிடையே திருவையாறு திரு. சுந்தரேச சிரௌதி என்பார் கிரீன்விச்சிலிருந்து வெளிவரும் நாவிகர் பஞ்சாங்கத் (Nautical Almanac) தை ஆதாரமாகக்கொண்டு கும்பகோணத்திற்குப் பஞ்

சாங்கம்கணித்து அதற்குத் திருக்கணித பஞ்சாங்கம் எனப் பெயர் தந்து வெளியிடத் தொடங்கினர். அவர் காலத்தின்பின், அவரது மகனர் திரு விசுவனாத சிரௌதி B. A. என்பார் அதனைத் தொடர்ந்து கணித்து நவிவருகின்றனர். திரு. C. கோவிந்தராஜ முதலியார் சென்னைக்குக் கணித்து ஆனந்தபோதினித் திருக்கணித பஞ்சாங்கம் எனப் பெயர்தந்து சில ஆண்டுகளாக வெளியிடுகின்றனர். சென்ற பதினைந்து ஆண்டுகளாக சித்தார்த்தி ஆண்டு தொடங்கி நமது சைவப் பஞ்சாங்கம் வெளிவருவதாயிற்று. இது பழைய முறைகளைத் தழுவியதே.

மதுரை திரு. கூடலிங்கம் பிள்ளை யென்பார் ஆனந்த ஆண்டு முதல் ஆனந்த முடிந்து அட்சயவரை எழுபத்துமூன்று ஆண்டுகளுக்கு ஒரு பஞ்சாங்கத் தொகுதி நூல் வெளியிட்டிருக்கின்றனர். சென்னைச் சட்டசபைத் தலைவராக இருந்த திரு. L. D. சாமிக்கண்ணுப்பிள்ளை. M. A., B. L., என்ற புலவர் கி. பி. 1-முதல் கி. பி. 2000வரை பஞ்சாங்கம் கணித்து அரசாங்க உதவி பெற்று வெளிப்படுத்தி யிருக்கிறார். நான்குநேரி, மூனும்பண்ணை கிருஷ்ண ஜோஸ்யர் என்பவர் பண்டைக்காலப் பஞ்சாங்க கணனம், சார கணனம், ஸ்புடகணனம், கிரகணகணனம் ஆகியவற்றின் பல வழிகளையும் கோவை செய்து 1897-ல் அச்சியற்றி உதவினர்.

உண்மையில் சாலிவாகன மன்னவனுக்குப் பின்னர் இந்தியாவில் சோதிக்கணித வழிகளைச் சரியாகக் குறித்து வெளிப்படுத்தியோர் ஒருவருமிலர், அதனல் அதன்கண் உள்ள மாறுபாடுகள் செம்மையுருது இருக்கின்றன. சீரும் சிறப்பும் பெற்று கணித முறைகளுக்கு உலகத் தாயகமாய் விளங்கும் இந்தியக் கணிதமுறை இக்கால நிலைக்கேற்பச் சீருறும் காலம் விரைவில் தோன்றுவதாக.

ஒளிநூல் வரலாறு முற்றும்.

பொருணூல்—(Economics)

[திரு. B. நடராஜன் B.A. (Hons)]

(முன் உ௭௧-ம் பக்கத்தொடர்ச்சி)

௩. பணத்தின் தொகை குறைதல்

அக்காலத்தில் பணத்தின் தொகை இருவழிகளாற் குறைவடைந்தன. (1) பொன்னும் வெள்ளியும் வெளிநாடு செல்லல். (2) பொன்நாணயங்களை அறவே புழக்கத்திலிருந்து போக்கவும்

பலவேறு வகையான வெள்ளி நாணயங்களைப் பயனற்றவையென ஒதுக்கவும் காரணமாயிருந்த 1835-ற் கண்ட இந்திய நாணயச் சட்டம். வெள்ளியுந் தங்கமும் விரைந்துபோய்ப் புதையுண்டு கிடக்கும் ஒரு பெருங்குண்டமென இந்திய நாடு தொன்று தொட்டே கருதப்பட்டுவருவதாயிற்று. இஃது எதனாலென்றால், நம் நாட்டிலிருந்து விலையுயர்ந்த பண்டங்களை நாம் விற்றுவந்தோமாயினும் அயல்நாட்டாரிடம் பொன்னைத் தவிர நாம் பெறுவதற்கான பண்டமொன்று மில்லாதிருந்தது. ஆகவே நமக்கு வரவேண்டுவனவற்றையெல்லாம் நாம் வெள்ளியாகவும் பொன்னாகவும் பெற்றுக் கொண்டிருந்தோம். இஃது உரோமானியப் பேரரசின் பொக்கிஷ அதிகாரிகள் நெஞ்சிலும் சஞ்சலம் விளைவித்தது. பொன்னெலாம் இந்தியாவுக்குப் புகுந்ததே உரோமாபுரியின் வீழ்ச்சிக்கு ஒரு தலையாய காரணமாகக் கருதப்படுகின்றது. ஆதியில்வந்த ஐரோப்பிய வர்த்தகர்களுக்கும் அதே அனுபவம் நேர்ந்தது. ஸர். தாமஸ் ரோ என்பார் இதனை 'ஆசியா செழிக்க ஐரோப்பா இரத்தம் சொட்டுகின்றது' எனச் சுருங்கக்கூறினர். ஆகவே ஐரோப்பாவிலிருந்து இந்தியாவுக்குப் பொன் வெள்ளி முதலியவை அனுப்பப்படுவதைத் தடுக்கக் கண்டிப்பான சட்டங்கள் விதிக்கப்பட்டன. இங்கிலாந்தில் தங்கம் வெள்ளி முதலிய நாணயங்களோ, உலோகக்கட்டிகளோ ஏற்றுமதி செய்வதைத் தடைசெய்பனவாய பல சட்டங்கள் ஏற்கனவே ஏற்பட்டிருந்தன. முதல் ஜேம்ஸ் அரசர் காலத்து இது மன்னிப்பு இகந்த பெருங் குற்றங்களில் ஒன்றெனக் கருதப்பட்டிருந்தது. ஆனல் பிற்காலத்தில் இத்தகைய கொள்கைகள் பெரிதும் மாறுதலடைந்தன. எனவே, 18-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் கீழ இந்திய வர்த்தகக் கம்பெனியார் இந்தியாவினுள் இறக்கிய சாக்குகளிலே முக்காற்பாகம் பொன்னும் வெள்ளியுமாகும். ஆனல் கம்பெனி இந்தியாவில் சொந்தமாக மாகாணங்களைப் பெறுந்தோறும் இந்தியாவுக்குத் தங்கமும் வெள்ளியும் அனுப்பிவருவது அவசியமில்லாதாகிவிட்டது; மேலும் கம்பெனிக்கும் சீனவுக்குமுள்ள வியாபாரத்திற்குக்கூட இந்தியாவிலேயுள்ள பொன்னும் வெள்ளியும் பயன்படுத்தப்படுவதாயிற்று.

இவ்வாருக ஆறு எதிர்த்துப் பாய்வதாயிற்று. பல நூற்றாண்டுகளாக நிதியைக்கொண்ட இந்தியா இப்பொழுது அதில்

ஒரு பங்கை உமிழவேண்டியதாயிற்று. இதுவே மீண்டும் மீண்டும் சென்ற காலங்களில் நடைபெற்றுள்ளது. இதனை ஒருகால் 'நிதிரேக்கம்' என்று ஒரு விதிபாகத்தான் கற்பிக்கலாமோ என எமக்குத் தோன்றுகின்றது. நூற்றாண்டுக் கணக்குகளாக இந்தியா பொன்னையும் வெள்ளியையும் பெற்றுக்கொண் டிருக்கின்றது; பிறகு திடீரென அதில் ஒரு பங்கை மீண்டும் உகுக்குந் தருண மொன்று எழுகின்றது. இத்தகைய ஒரே தன்மையான நிதி இயக்கம் தொன்றுதொட்டு இன்று வரையில் இந்தியாவின் பொரு ளாதார நெறியிற் காணப்படுகின்றது. அதிலும், பின்னுமோர் சிறப்பு என்னவெனில், எப்பொழுது ஐரோப்பாவில் பொன்னி னளவு குறைவுபட்டதோ அப்பொழுதே இந்தியாவிலு மிருந்து பொன் வெளியே ஒழுகுகின்றது. 16-ம் 17-ம் நூற்றாண்டுகளிலே இவ்வொழுக்கு இந்தியாவை நோக்கியதாக இருந்தது. ஆனால் 1757-வது ஆண்டிற்குப் பிறகு ஒழுக்கின்போக்கு மாற்றமடைந் தது. பொன் இங்கிருந்து வெளியே ஏக ஆரம்பித்தது. 19-ம் நூற் றாண்டின் முற்பகுதியில் அயல்நாடுகள்நோக்கிப் பாய்ந்த தங்க வெள்ளி ஒழுக்கானது மிக வேகமா யிருந்தது. 1840-ம் ஆண்டிற்குப் பிறகு அந்த ஒழுக்கின் வேகம் அடங்கிற்று. பிளாசிப் போரிலடைந்த வெற்றியின் பயனாகக் கீழ் இந்தியக் கம்பெனியார் இந்தியாவில் பெரும் மகாஞதிபதிகளாய் விட்டனர். அதனால் ஏராளமான வருமானம் பெறலாயி னர். சுதேச மன்னரும் சிற்றரசர்களும் கம்பெனிக்கும் அதனைச் சார்ந்த ஆட்களுக்கும் விலையுயர்ந்த திரவியங்களைத் திறையாகவும் நன்கொடையாகவு மளித்தனர். கம்பெனியின் வேலையாட் களிலே பலர் பெருநிதி திரட்டினர். ஆறாண்டுக்குள் போள்ட்ஸ் என்பவர் 90,000 பவுன் சேர்த்ததாக ஒப்புக்கொண்டிருக்கிறார். அன்றியும் கம்பெனிக்கு இங்கிலாந்திற் பலருக்கும் ஏராளமான பொருள் ஆண்டுதொறும் செலுத்தவேண்டி யிருந்தது. இதற்கு வியாபாரச் சரக்குகளே யன்றி தங்கக்கட்டி, நாணயம் முதலி யனவும் அனுப்பிவரலாயிற்று. சீனதேசத்திலும்கம்பெனியாருக்கு வர்த்தகமிருந்தது. இதற்காக ஏராளமான தங்கமும் வெள்ளியும் அங்கு அனுப்பப்பட்டது. இந்தத்தங்கமும் வெள்ளியும் மீண்டும் இந்தியாவுக்கு வரவேயில்லை. இவற்றின் பயனெல்லாம் என்ன வென்றால் நிதிக்குவியல்கள் மட்டுமன்றி, தங்க வெள்ளி நாணயங்க ளும் ஆண்டுதொறும் ஆண்டுதொறும் நாட்டைவிட்டு அகன்றது.

புழங்கும் நாணயத்தின் தொகை அருகியது. இதற்குப்பதிலாக 'பில்லுகள்' 'உண்டிகள்' முதலிய நாணயத்தாட்களை வழக்கிற்புகுத்தி பணமிலாக் குறைவினை நிரப்பி இருக்கலாம். பில்லுகள் உண்டிகள் முதலியவற்றின் பயனைக் கம்பெனியாரும் உள்நாட்டு வியாபாரிகளும் நன்கு அறிந்திருந்ததுமன்றி அவற்றைக் கையாடியும் வந்தனர். ஆனால் பற்பல காரணங்களால் அவற்றின் தொகை மிகச் சுருங்கிய அளவிலேயே அமையவேண்டியதாயிற்று. தொடக்கத்திலிருந்து இவ்வாறு நிதி நாட்டிலிருந்து வெளியேறுவதன் தீமைகளைக் கம்பெனியார் உணர்ந்தனர். ஆனால் நெடிது காலம் வரை அவர்களுக்கு அதனை ஒழிக்க இயலாதாயிற்று.

இந்தியா ஏற்றுமதி செய்துவந்த பண்டங்களின் தலைமை நிலை தணிந்ததும் இவ்வாறு நிதி ஏகுவதற்கு மற்றோர் காரணமாக இருந்தது. முதன்முதல் ஐரோப்பிய நாடுகள் இந்தியாவோடு வாணிபம் நடத்துகையில் மிளகும் காலிக்கோவுமே இந்தியாவின் தலையாய ஏற்றுமதிச் சரக்குகளாயமைந்திருந்தன; இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டு வந்த சரக்குகளில் பெரும்பாகம் இவ்விரண்டு பண்டங்களேயாகும். ஆனால் 18-ம் நூற்றாண்டிறுதியில் இவ்விரு ஏற்றுமதிப் பொருள்களும் அளவிலேயன்றி விலையிலும் சுருங்கின. மிளகின் தலைமை போவதற்குக் காரண மென்னவெனில், முன்காலத்தில் கொடுங்குளிர் காலத்தில் அங்கிலேய நாட்டில் கன்று காலிகளுக்குப் போதுமான பயிர் பச்சைகள் ஏற்றனவாக உண்டாகவில்லை. எனவே அவைகளைக் கொன்று அவற்றின் ஊனை அக்குளிர்காலத்தில் சேமித்து வைப்பதே வழக்கமாக இருந்தது. இவ்வாறு அந்த ஊன் கெட்டுவிடாமல் சேமித்து வைக்க ஏராளமான மிளகு இன்றியமையாததாக இருந்தது. ஆனால், பிற்காலத்தில் டௌண்செண்ட் என்பவரும் ஜெத்ரோடல் என்பவரும் சில வியவசாயப் பரிசோதனைகள் நடாத்திக் குளிர் காலத்தும் கன்று காலிகள் உயிர்வாழ்ந்திருக்க ஏற்ற சில கிழங்குச் செடிகளை ஏராளமாகப் பயிர்செய்ய முற்பட்டனர். இதன் பயனாக குளிர்காலத்தில் ஊனைச் சேமித்துவைக்கும் பழக்கம் ஒழிந்தது. அதோடு மிளகின் தலைமையும் சென்றது. காலிக்கோ வாணிபத்தின் கதி எவ்வாறாயிற்றென்றாலோ, பிரிட்டிஷ் தேசமானது 19-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இயந்திரப் புரட்சியின் பயனாக அதுகாறும் பருத்தித்துணிகளை இறக்குமதி செய்துகொண்டி-

ருந்த ஒரு நாட்டிலிருந்து பருத்தித்துணிகளை ஏற்றுமதி செய்யுமோர் நாடாய்—தலைமை ஏற்றுமதிநாடாய்—திரிந்தது. புதிதாய்க் கண்டுபிடிக்கப்பட்ட நீராவிச் சத்தியா லியக்கப்பெற்ற ஆலைகளின் உதவியால் இங்கிலாந்தில் நெசவுத் தொழில் மிகச் சொற்பச்செலவில் செய்யப்படுவதாயிற்று. இதனால் அதுவரைத் துணிக்கு இந்தியாவையே எதிர்பார்த்திருந்த ஐரோப்பியநாட்டுச் சந்தைகளைப் போட்டியாற் கொண்டது மன்றி இந்தியாவிற்குள்ளும் புகுந்து இங்குள்ள கையினால் இழைக்கப்பற்ற விலை ஏறின காலிகோவுக்கும் மஸ்லினுக்கும் உலைவைத்தது. என்னே இயந்திரத்தின் வன்மை! இங்கிலாந்தில் அக்காலத்தில் இந்தியத் துணிச்சரக்குகள் மீது சுமத்தப்பட்ட பளுவான சுங்கங்களும் இந்திய ஏற்றுமதியின் அழிவை விரைவாக்கியது என்பது மறுக்கப்படாததே எனினும் இந்த அழிவு கேவலம் மனித உழைப்புக்கு மேலுள்ள இயந்திரத்தின் ஏற்றத்தால் மட்டும் எங்ஙனமும் விளைந்தே தீரும். (தொடரும்)

புத்தர் பிரான் பொருண்மொழிகள்

[பண்டிதர் திரு. அ. நடராசபிள்ளை அவர்கள்.]

9. தலைவனின் கடமைகள்

தலைவனே !

1. ஊழியர் வலிமைக் குகந்தபணி கொடுப்பாய்.
2. செய்பணிக் கியைந்த கூலியைச் சிதையேல்.
3. ஊழியர்க் குண்டாம் நோயினை யொழித்திடு.
4. இடைக்கிடை யவர்க்குநல் லேற்றமாம் விருந்திடு.
5. ஓய்வுநாள் கொடுத்தவ ரூக்கத்தைப் பெருக்கு.

10. தொழிலாளரின் கடமைகள்

தொழிலாளர்காள் !

1. காலையி லெழுந்து கருதுமின் செய்தொழில்.
2. தலைவ னுறக்கந் தனைக்கண் டுறங்குமின்.
3. பெற்றதைக் கொண்டு பெருமகிழ் வுறுமின்.
4. ஊக்கங் கொண்டே யுயர்நிலை யடைமின்.
5. தலைவனைத் தூற்றுந் தவற்றினை யொழிமின்.

ஆராய்ச்சிப் பகுதி-Research

மேற்கோள்களும் அவற்றை அறிவு வளர்ச்சிக்குப் பயன்படுத்தும் முறையும்

(திருவாளர் மா. வே. நெல்லையப்பபிள்ளை அவர்கள் B. A.)

மேற்கோள் என்ற தமிழ்ச்சொல் மேல், கோள் என்ற இரண்டு சொற்களாலாகி ஒருசொல் நீர்மைத்தாய் வழங்கப்பட்டு வருகிறது. ஒருவர் தாமாக அறியுங் கருத்து அல்லது உண்மைக்கு மேலானதாயிருக்கும் கருத்து அல்லது உண்மை ஒன்றைக் கொள்வது அவருக்கு மேற்கோள் ஆகும். அத்தகைய மேலான கருத்து அல்லது உண்மையைக் கூறுகிறவர் அதனைக் கொள்ளுகிறவருக்கு மேலான அறிவுடைய ராயிருப்பர்; ஆதலின் அவர் அவருக்கு ஆசிரியராவார்; ஆதலின், மேற்கோளானது ஆசிரியவசனம் என்று கூறப்படுகின்றது. ஆசிரியர் பலவகையர். ஆசிரியர் ஒருவர் வேறொருவருக்கு அல்லது வேறு சிலருக்கு ஆசிரியராயிருக்கலாம்; அல்லது அவர் ஒரு சமயத்தைச் சார்ந்த பெருமக்கட் கூட்டத்துக்கு ஆசிரியராயிருக்கலாம். சிலருக்கு அல்லது ஒரு சிறு கூட்டம் மக்களுக்கு ஆசிரியர் ஒருவர் நூல்களைக் கற்று ஆராய்ந்து தெளிந்து கூறுகிற கருத்து, அச்சிலருக்கு அல்லது அச்சிறு கூட்டமக்களுக்கு மேற்கோள்களாக விருக்கும். ஒருசமய ஆசிரியர் கூறும் கருத்துக்கள் அல்லது உண்மைகள் அச்சமயிகள் எல்லாரும் கொள்கிற மேற்கோள்களாகும். இதுவன்றி யாதாமொருசமயத்தில் எவராயினும் ஓர் அறிஞர் தாம் ஒரு சொற்பொழிவில் கூறுகிற கருத்துக்களை அல்லது உண்மைகளை அதனைக் கேட்கிற சிலர் அல்லது பலர் மேற்கோள்களாகக் கொள்ளலாம். மேற்கோள்கள் நூல்களில் எழுதப்படலாம், அல்லது சொற்பொழிவுகளில் கூறப்படலாம். மேற்கோள்கள் எவ்வாறு பிறருக்குத் தெரிவிக்கப்படினும் அவைகளுடைய தன்மை மாறாது. சொல்கிறவர் அல்லது எழுதுகிறவர் அறிவுத்திறமைபற்றி மேற்கோள்களின் மதிப்பு வேறுபடும் தன்மையை உடையதாயிருக்கும்.

2. மேற்கோள்களைக் கூறும் ஆசிரியர் அவர்களது அறிவின் வன்மைக்குத் தக்கவாறு பலதிறப்படுவர். அவர்களை இரண்டு பெரும் பிரிவினராக நாம் பிரிக்கலாம். கருவி கரணங்களைத் துணையாகக் கொள்ளாமல் இறைவனது அருள் தங்களிடம் நிரம்பப் பெற்ற காரணத்தால் அடைந்த தங்கள் மெய்யுணர்வினால் சமய உண்மைகளையும் பிறகருத்துக்களையும் அறியவல்ல பெரியார்கள் சிறந்த ஒரு வகையர்; ஐம்பொறிகள் மனம் முதலிய கருவிகாரணங்களைத் துணைக்கொண்டு அறியப்படும் கருவி அறிவினால் அறியும் அறிஞர்கள் மற்றொரு வகையர்.

3. முதலாவது வகை மேற்கோள் ஆசிரியர்கள் பசுகரணம் நீங்கிச் சிவகரணமாக மாறப்பெற்ற தூய உள்ளத்தினை யுடையவர்களாய் இறைவனது நிறைவான அருட் பேரொளியின்கண் அடங்கி மேலான உண்மைகளை எல்லாம் நேராய் அறியும் ஆற்றலுடைய மெய்யுணர்வு விளங்கப் பெற்றவர்கள். தன்முனைப்பு உடைய தூய்மையில்லாத உள்ளத்திற்குரிய உள்ளச்சார்புகள் (Prejudices) ஐயம் திரிபுகள் முதலிய குற்றங்கள் அவர்களிடத்திற் சிறிதுமில்லை; ஆதலால் அவர்கள் கூறும் உண்மைகளெல்லாம் யாவராலும் மேற்கோள்களாகக் கொள்ளத்தகுந்த உண்மைகளாம். அவர்கள் யாதாயினுமொன்று, மெய்யுணர்வு அடையப் பெறாத இருவர் கண்டால் அவ்வேறுபாடு, அவ்விருவரும் அறியும் திறனாலுண்டாவதன்றி கூறப்பட்ட உண்மையின் வேறுபாட்டினாலன்று. அத்தகைய மேற்கோள்கள், நமது சைவசமய ஆசிரியர்கள் தேவார, திருவாசகம், திருக்கோவையார் நூல்களிற் கூறுகிற உண்மைகளும், சந்தானசாரியர் நால்வரும் கூறும் சைவசித்தாந்த உண்மைகளும், காரைக்காலம்மையார், திருமூலர் கூறுகிற உண்மைகளும், பிற்காலத்தில் பட்டினத்து அடிகள் தாயுமான அடிகள், குமரகுருபர அடிகள், அருணகிரிநாத அடிகள் முதலிய அருள்பெற்ற பெரியார்கள் கூறின உண்மைகளுமாம். பல இடங்களில் பல காலங்களில் இருந்த இந்த அருட்பெரும் பெரியார்கள் தோத்திரப்பாடல்களிலும் சாத்திரப்பாடல்களிலும் கூறிய சைவ சித்தாந்த உண்மைகளெல்லாம் சிறிதும் வேறுபடாமல் ஒரு தன்மையனவாயிருத்தலே அவர்களெல்லாரும் உள்ளும் புறமும், மேலும் கீழும் நடுவும் எங்கும் ஒருதன்மையாய் நோக்கும் நிறைவான அருட்காட்சியை உடையவர்கள் என்பதை அறிஞர் எவ

ருக்கும் தெள்ளிதிற் புலப்படுத்தும். மேலே கூறப்பட்டவகை நூல்களெல்லாம் அருள் நூல்கள் என்று கூறப்படும். அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு உறுதிப்பொருள்களையும் கூறுகிற திருவள்ளுவர் திருக்குறளும் அருள் நூல்வகைக்குச் சேர்ந்ததாகும். இக்கருத்தினையே ஔவையார் நல்வழியில்.

> "தேவர் குறளுந் திருநான் மறைமுடிவும்
> மூவர் தமிழும் முனிமொழியும்—கோவை
> திருவாசகமுந் திருமூலர் சொல்லும்
> ஒருவா சகமென் றுணர்"

என்று கூறியருளினர்.

4. முதலாவது மேற்கோள் வகைக்குச் சேர்ந்த அருள் நூல்களெல்லாம் மேலே கூறப்பட்டபடி கருத்து வேறுபாடுடையன வல்லவா யிருப்பினும் அந் நூல்களை ஓதியும் கேட்டும் தங்கள் கருவி அறிவில்வைத்து ஆராய்ந்து அறியும் அறிஞர்கள் தாங்கள் அறியும் அறிவுவன்மை வேறுபாடுபற்றி அவைகளில் வேறுபாடுகளிருப்பனவாகத் தப்பிதமாய் அறியலாம். அருட்பெரியார்கள் கூறும் மேற்கோள் உண்மைகள்வேறு; அவ்வுண்மைகளைக் குறைபாடுடைய கருவி அறிவுடையவர்கள் தங்கள் அறிவின்கண் பொருந்தவைத்து அறியுந்தன்மை வேறு. அருட்பெரியார்கள் கூறும் உண்மைகள் தமிழ்மொழிச் சொற்களிலும் வடமொழிச் சொற்களிலும் கூறப்பட்டிருக்கின்றன. சொற்கள், அவைகள் கூறுங் கருத்துக்களை நன்கு அறிந்து உணராதவர்களுக்குக் கருத்துக்களை அறிதற்குத் தடைகளாயிருக்கின்றன. *

ஆதலின் அருள்நூல்களை ஓதுகிறவர்கள் தாங்கள் ஓதி அறிந்தார் மாட்டுக் கேட்டும் தங்கள் உள்ளத்தின்கண் பல்கால் நினைத்து ஆய்ந்தும் அளவைநூல் முறைமைக்கு இணங்க அறிதல் பண்டைத்தமிழறிஞர் வழக்கா யிருந்தது. அவர்கள் பண்டைக் காலத்தில் அறிவிற் சிறப்புற்று வாழ்ந்திருத்தலுக்கு இவ்வழக்கே முதன்மையான காரணமாயிருந்தது. (தொடரும்)

---

*"சொற்பாவும் பொருடெரிந்து தூய்மை நோக்கித் தூங்காதார் மனத்திருளை வாங்காதானை" என்று திருநாவுக்கரசு அடிகள் கூறிய திருத்தாண்டகத் தேவாரக் கூற்றையும், (Letters Killeth) என்ற ஆங்கில வசனத்தின் உண்மையையும் நோக்குக.

கவின்கலைப் பகுதி—Fine Arts

மத்த விலாசப் பிரகசனம்

அல்லது

சம்பந்தர் கால சமயிகள் நிலை

[திரு. தி. கி. நாராயணசாமி நாயடு அவர்கள்]

(உரிமை ஆசிரியர்க்கே.)

நாடகத்தா லுன்னடியார் போனடித்து நானடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின்றேன்.

—திருவாசகம்.

முன்னுரை

வடநூல் நாடகவகைகள் தசரூபகங்களென்ப: அவற்றி லொன்று பிரகசனம் என்பது. * "இது சுத்தம், விகிர்தம், சங்கீர்ணம் என மூவகைப்படும். சுத்தப் பிரகசனத்திலே பாஷண்டர், விப்பிரர், சேடன், சேடி என்னும் இன்னோர் தோற்றிப் பொருத்தமான வேஷமும் பாஷையும் தோன்ற நகையை விளக்கும் நகைப்புக் குறிப்பு மொழிகளைக் கூறி நடிப்பர். காமுகாதியோர் தோற்றிக் காமக் குறிப்புத் தோன்ற நடிப்பது விகிர்தப் பிரகசனம்; தூர்த்தர் பலர் தோற்ற அறுவகை நகைக் குறிப்பும், வீதியென்னும் மற்றொரு நாட்டிய வகையின் இலக்கணமும் பெற்று வருவது சங்கீர்ணப் பிரகசனம்." ஈண்டு எடுத்துக்கொண்ட மத்தவிலாசப் பிரகசனம் சுத்தப் பிரகசனத்தைச் சார்ந்தது.

நகைச்சுவை நாடகமாகிய பிரகசனத்தின் இலக்கணத்தை திரு. வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார்

'முனிவர் தேவர் முதுமறை யந்தணர்
எனுமிவ ரிடைவர விழிவு நிந்தையும்
பெறவெறும் போலிக ளுறுதலை மக்களாச்
சாத்து வதியே கைசிகி தந்து
நகைச்சுவை தன்னை மிகுத்துக் காட்டி

---

* மதங்க சூளாமணி - சுவாமி விபுலாநந்தர்.

ஒன்றே யாத லிரண்டே யாதல்
அங்கங் கொண்ட தரும்பிர கசனம்'

என நாடகவியலில் நவலுதல் காண்க.

ஓர் அங்கத்தில் நான்கு களங்களில் முடிந்த இச்சிறிய நாடகத்தினை ஆக்கியவன் அப்பர் பெருமானால் சைவ சமயம் திரும்பிய பல்லவ மன்னனும் முதல் மகேந்திரவர்மன். இதில் †"பாசுபத மதத்தினராகிய துறவியொருவரையும், ஒரு காபாலிகரையும், அவர் தம் மனைவியாரையும், ஒரு பௌத்தபிக்குவையும், உரையாட விட்டு அவர் தம்மை யெல்லாம் எள்ளனஞ்" செய்திருக்கிறது. ‡"இது நகைப்புண்டாக்கத்தக்க நாடகம். இந்த நாடகத்தைப் படித்தால் மகேந்திரன் காலத்தில் மக்களின் நடைகள், வழக்கங்கள் எவ்வாறு இருந்தன என்று அறிந்து கொள்ளலாம். மற்றைய நாடகங்களைப்போல் புராண கதைகளைப்பற்றி யல்லாமல் மக்களின் வாழ்க்கை முறைகளைக் காட்டி எழுதியது."

இவ்வடமொழி நாடகத்தை முதன்முதல் திருவநந்தபுர வடமொழி நூல் நிரலில் 1917-ல் 55-வது நூலாக கணபதி சாஸ்திரிகள் அச்சிட்டுதவினர். இதனை ஜெர்மனி நாட்டு லீப்சிக் (Leipzig) நகர வாசியான டாக்டர் ஜே. ஹெர்ட்டல் 1924-ல் அவர் தம் மொழியில் (Dr. J. Hertel's Die Streiche Des Beraus Chten) பெயர்த்தனர். கீழ்நாட்டுக் கலைக்கழக ஆராய்ச்சி மடல் என்ற பருவ இதழில் பார்ராட் துரைமகன் ஆங்கிலத்தில் 1929-ல் ஆக்கினர். (The Bulletin of The School of Oriental Studies London institution : Vol. V - Part IV L. D. Barnett.)

இக்களிக்கூத்து பௌத்த, பாசுபத, காபாலிக சமயிகளைக் கொண்டு நிகழ்தலின் அவர்தம் சமயசாரத்தை சிவஞான முனிவர் பாடியத்துள் தொகுத்துரைத்ததை ஈண்டு மொழிப்பாகத் தருதும்.

சமயங்கள்

சமயங்களெல்லாம் புறப்புறச் சமயம், புறச்சமயம், அகப்புறச் சமயம், அகச்சமயமென நான்கு வகைப்படும். அவற்றுள், புறப்புறச் சமயம் உலகாயதம், நால்வகைப் பௌத்தம், ஆருகதமென்பன ; புறச்சமயம் தருக்கம், மீமாஞ்சை, ஏகான்மவாதம்,

---

† பல்லவர் சரித்திரம் 13-ம்பக்கம்-பி. தி. சீநிவாச அய்யங்கார் ‡ மாணிக்க வாசகர் காலம் - 668-ம் பக்கம்-மறைமலையடிகள்.

சாங்கியம், யோகம், பாஞ்சராத்திர மென்பன ; அகப்புறச் சமயம் பாசுபதம், மாவிரதம், காபாலம், வாமம், வைரவம், ஐக்கிய வாத சைவமென்பன ; அகச்சமயம் பாடாணவாத சைவம், பேதவாதசைவம், சிவசமவாதசைவம், சிவசங்கிராந்த சைவம், ஈசுவர விகாரவாத சைவம், சிவாத்துவித சைவமென்பன.

ஈண்டுக்கூறிய சமயத்தாருள், உலகாயதர்முதல் ஆருகதரீறாகிய அறுவரும், வேதம் சிவாகமம் இரண்டனையும் நிந்திக்கும் நாத்திகராயினும், ஒரு நூலென்றும், பிரமாணமென்றுங்கொண்டு ஒரு நெறிக்கண்ணே நிற்றலான் அவர் சமயம் புறப்புறச் சமயமென வேறுவைத்து எண்ணப்பட்டன.

பாசுபதர் முதலிய ஐவரும், வேதம், சிவாகமம் இரண்டற்கும் பொதுவகையாற் பிரமாணங் கொள்ளினும், அவ்விரண்டற்கும் புறமாகிய பாசுபத முதலிய நூல்கட்குச் சிறப்பு வகையாற் பிரமாணங் கோடலானும், வேதம், சிவாகமம் இரண்டினும் ஆகா என விலக்கப்பட்டனவற்றை ஆசரித்தலானும், ஐக்கியவாதசைவர் வேதம், சிவாகமம் இரண்டற்கும் சிறப்புவகையாற் பிரமாணங் கொண்டு, அவற்றில் விலக்கியன ஒழித்து விதித்தவழி ஒழுகுவாராயினும் எல்லாப் பெருங் கேட்டுக்கும் மூலகாரணமாகிய ஆணவமலத்துண்மை கொள்ளாமையானும், அதினுண்மை சாதிக்கும் சிவாகம வாக்கியங்களை இகழ்தலானும் அவ்வறுவகைச் சைவமும் அகப்புறச் சைவமென வேறு வைத்து எண்ணப்பட்டன.

பௌத்தமாவது :—உலகத்துப் பிறந்து, இறந்து, உழன்று, சீல முதலியவற்றான் நல்லுணர்வு தோன்றி முழுதுணர்ந்து முத்தி பெற்றுத் தன்னைப்போல் பிறருமுணர்ந்து உய்தற் பொருட்டுக் கருணையினால் பிடகநூல் செய்தவன் புத்தக் கடவுள்; அந்நூலிற் கூறும் பொருள்களாவன : ஞானமே ஆன்மா எனப்படும் ; அது நீரோட்டம் போலத் தொடர்ச்சியாய்க் கணந்தோறுந் தோன்றி அழியும் ; அங்ஙனம் தோன்றி அழியுங்கால், முன் மான்மதம் வைத்தெடுக்கப்பட்டு ஒழிந்த பெட்டியில் பின் வைக்கப்படும் பொருளினும் அதன் வாசனை பற்றுதல்போல முற்கணத்தின் அழிவெய்தும் ஞானத்தில் தோன்றிய வாசனை, பிற்கணத்தில் தோன்றும் ஞானத்தில் பற்றுதலால் அறிவு முதலியன நிகழும் ; மற்றும் உள்ள பொருளெனப்பட்டவை யெல்லாங் கணந்தோறும்

தோன்றி அழியும்; இந்த ஞானத்தில் தோன்றிய வாசனை அழி வதே முத்தி என்பதாம். ஞானங் கூடக் கெடுதல் முத்தி என் பாருமுளர்.

இப்பௌத்தமதத்தர் மாத்தியமிகர், யோகசாரர், சௌராந் திகர், வைபாடிகரென நால்வகைப்படுவர். இந்நால்வரும் முறையே எல்லாப் பொருளுஞ் சூனிய மெனவும், புறப்பொருள் சூனிய மெனவும், புறப்பொருளுண்மைவழி யவையான் அறியப்படு மெனவும், புறப்பொருள் காட்சிப் பொருளாமெனவுங் கூறுப. இந்நால்வரும் ஆதிபுத்தனுடைய மாணாக்கர்கள்.

அகப்புறச் சமயமாறனுள் பாசுபதமாவது :—ஆன்மாக்கள் பலவாய், நித்தமாய், வியாபகமாய்க் காரிய காரணக்கூட்டு உற வால் தோன்றும் ஞானத்தால் தனித்தனி வேறுயுள்ளன. இவ் வான்மாக்களுக்கு ஆணவமலம் என்பதொன்றில்லை. மாயை கன்மம் என்று இரண்டால் பந்தமுற்று இன்பதுன்பங்களை அனுப விக்கும். இவற்றின் உவர்ப்புத் தோன்றிச் சாத்திர முறை யானே தீக்கை பெற்றவன்பால் ஈசனுடைய ஞானம் போய்ப் பற்றும். அப்போது, குடும்பத்தின் பாரம் புத்திரர்பால் வைத் தொழித்து, துறவறத்தில் செல்வார்போல, ஈசனுந் தன்னுடைய குணங்களை அவன்பாற் பற்றுவித்து, தான் அதிகாரத்தின் ஒழிவு பெற்று இருப்பன் என்பதாம்.

காபாலமாவது.—ஆன்மாக்கள் பந்தமுற்றுச் சுகதுக்கங்களை அனுபவிக்கும். சாத்திர முறையே தீக்கை பெற்றுப் பச்சைக் கொடி ஒன்று கைக்கொண்டு நாடோறும் மனிதர் தலையோட்டில் ஐயமேற்றுண்பர். உன்மத்தராய்ச் சிவனுவேசித்தல், எல்லாக் குணங்களும் பெற்றுச் சிவ சமமாவர் என்பதாம்.

இச் சமயிகளை அப்பர் பெருமானும் தமது தேவாரத்திற் கூறி அருளுதல் காண்க.

விரிசடை விரதிகள் அந்தணர்
சைவர் பாசுபதர் கபாலிகள்
தெருவினிற் பொலியும்
திருவாரூர் அம்மானே!

(தொடரும்)

திருநெல்வேலி

சென்னை மாகாணத் தமிழர் மாநாடு.

அறிக்கை உ.

[1934 மார்ச்சு 30, 31; ஏப்ரல் 1 ஆகிய நாட்களில் நடைபெறும்]

தமிழ்மொழி மாண்பு

௧. தொன்மை:—பேச்சு வழியாலும் நூல்வழியாலும் மக்களது அறிவை வளர்ப்பதற்கு உலகத்திலே பல திருந்திய மொழிகள் உள்ளன. அவற்றுள் நம் நாட்டில் தமிழ்மொழியே தொன்றுதொட்டு இன்றுவரையும் பேச்சுவழக்கிலும் நூல்வழக்கிலும் வழங்கிவருவதாயும், தனது பழமையான உரு சிதைவுபெறுமல் இன்றுகாறும் நிலவும் மொழியாயும் விளங்குகின்றது. தமிழ்மொழியின் தொன்மையை நன்கு விளக்கிக் காட்டுவன பல்லாயிரம் ஆண்டுகளுக்குமுன் இயற்றப்பட்ட தொல்காப்பியமாகிய இலக்கணமும், திருக்குறள் முதலிய சங்க நூல்களுமாம். அந்நூல்களில் வரும் "யாதும் ஊரே யாவருங் கேளிர்", "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும், நன்றே நினைமின்" என்பன போன்ற மிக உயரிய அறவுரைகள் உலக அன்பையும் ஒற்றுமையையும் (Internationalism) மக்களிடைப் பரவச்செய்யும் வன்மையுடையன. திருக்குறளிற் கூறப்பட்ட ஒழுக்க முறைகளும் அரசியல் முறைகளும் பிறவும் இக்காலத்திலுங்கூட வேறு எம்மொழியினுங் காணப்படாத சிறப்பை உடையனவாய்த் திகழ்கின்றன.

உ. இயற்கைப் பான்மை:—கடவுள் உலகினை நடைபெறும்படி இயக்கும் இயற்கையின்வழி தமிழ்மொழியின் இலக்கணமும் அமைந்துள்ளது. தமிழ் என்னுஞ் சொல் இனிமை என்று பொருள்படும். தமிழ்மொழி மெல்லோசையுடன் கேட்போர்க்கு இன்பம் பயப்பதாயுள்ளது. தமிழ்மொழி பிறமொழிகளை நோக்கக் குறைந்த மூச்சுச் செலவில் கருத்துக்களை விளக்குஞ் சொற்களமைந்தது. அதன் சொற்களனைத்தும் பெரும்பான்மை ஓரசை முதல் நான்கசைவரையே யுள்ளன. அதுபற்றித் தமிழ்மொழி எழுத்திலக்கணமும் சொல்லிலக்கணமு முடையதோடு பிறமொழிகளில் இல்லாத பொருளிலக்கணத்தையு முடையது. நமது செந்தமிழ்த் தாய்க்கு எழுத்திலக்கணம் உறுப்புக்கள் போலவும், சொல்

விலக்கணம் உடல் போலவும், பொருளிலக்கணம் உயிர்போலவும் இலங்குகின்றன.

நோக்கம் :—இத்தகைய சிறப்புக்கள் வாய்ந்த நம் தாய்மொழியைத் தமிழ்நாட்டிற் பிறந்து வளர்ந்து அதனைப் பேசிவருகின்ற எவ்வகை மக்களுக்கும் பிற நாட்டினர்க்கும் அறிவை வளர்த்தற்கு ஏற்ற கருவியாகப் பயன்பெறச் செய்தலே இம்மாநாட்டின் முதன்மையான நோக்கமாகும்.

இப் பெருநோக்கத்தை நிறைவேற்றுவதற்காக இம் மாநாட்டில் 'சென்னை மாகாணத் தமிழர் சங்க' மொன்று அமைக்கப் பெறும். அச்சங்கம் பின்வரும் அரும்பணிகளைச் செய்யும் :—

1. செந்தமிழ்மொழியின் முன்னேற்றத்திற்கான செயல்களைச் செய்தல். 2. செந்தமிழ்ச் சீரிய கலைகளாகிய இசைக்கலை, மருத்துவக்கலை, ஒளிநூற்கலை முதலியவற்றை வளர்த்தல். 3. தனித்தமிழ் நூல்கள் எழுதியும், பிறமொழிகளிலுள்ள அறிவு நூல்களைத் தனித்தமிழில் மொழிபெயர்த்தும் தமிழ்மொழியை வளம்பெறச் செய்தல். 4. மொழிபெயர்க்கப்பெறும் மேலைநாட்டு அறிவியற் சொற்களுக்கு (Scientific terms) ஏற்ற சொற்களைப் பழந்தமிழ் நூல்களில் ஆய்ந்து திரட்டியும், தமிழ்ப்பகுதிகளை (Roots) அடிப்படையாகக்கொண்டு புதுச்சொற்களை ஆக்கியும் தமிழ்ச்சொற்றொகுதியை வளம்படுத்தல். 5. தமிழ் நூல்களை ஆங்கிலம் முதலிய பிற மொழிகளில் மொழிபெயர்த்தல். 6. மக்களுக்குள் அன்பையும் ஒற்றுமையையும் வளரச்செய்து உலகம் நலமடையச் செய்தல்.

மாநாட்டு நிகழ்ச்சி

30—3—34-ல் தமிழ் நூற்காட்சி நிலையம் திறந்து வைத்தல் ;

31—3—34 காலை மாலை, 1—4—34 மாலை சென்னை மாகாணத் தமிழர் மாநாடு ;

1—4—34 காலை சென்னை மாகாணத் தமிழ்ப் புலவர் மாநாடு.

கட்டணம்

காப்பாளர்:- ரூபா 25-ம் அதன்மேலும் நன்கொடையாகக் கொடுப்பவர்கள்.

வரவேற்புக் கழகத்தார்:-ரூபா 5-ம் அதன்மேலும் கொடுப்பவர்கள்.

உரிமையாளர் (Delegates):- ரூபா 2-கொடுப்பவர்கள்.

தமிழ் நாட்டின் பல இடங்களிலிருந்தும் அறிஞர்களும், அன்பர்களும், அரசியற் பிரிவுகளின் தலைவர்களும், அமைச்சர் களும் வருவார்களென்று எதிர்பார்க்கிறோம. ஆதலால் இம் மாநாட்டைத் தக்க முறையில் நடாத்துவதற்கு ரூபா மூவாயிரத் துக்குக் குறையாமற் செலவாகு மென்று நம்புகிறோம். ஆதலின் தமிழ்மக்களும் தமிழன்பர்களும் இதற்கு வேண்டிய பொருளுதவி யும் பிற எல்லா உதவிகளும் செய்தும், இம் மாநாட்டுக்கு வந் திருந்தும் செம்மையாக நடத்தித் தரும்படி வேண்டிக்கொள்ளு கிறோம்.

மாநாட்டுக்குத் தீர்மானங்கள் அனுப்ப விரும்பும் சங்கங் களும் அறிஞர்களும் வருகிற மார்ச்சுத் திங்கள் 15-ஆம் நாளுக் குள் (15—3—34) அவை மாநாட்டு நிலையத்துக்கு வந்து சேரும் படி அனுப்ப வேண்டுகிறோம். அவைகளை மாநாட்டில் கொண்டு வரவோ அல்லது நிறுத்திவைக்கவோ நிறைவேற்றுக் கழகத் தாருக்கு உரிமையுண்டு.

வரவேற்புக்கழகத்தார்.

ஜகதீஸ சந்திர போஸ்

(முகப்புப் படம் பார்க்க)

கட்புலனாகும் ஒளி அலைகளும் கட்புலனாகா ஒளி அலைகளும் ஒருதன்மையனவே என்று தெரித்துக்காட்டி மின்சார அலைகளின் பண்பை எல்லாத் துறைகளிலும் ஆராய்வதற்கு வேண்டிய ஆய்வு முறைக் கருவிகளை அமைத்தும், செடி கொடி மரங்களும் மக்களைப் போலவும் விலங்குகளைப்போலவும் உயிருடையன வென்பதை மறுக்கொணாவாறு ஆய்வு முறைகளால் எடுத்துக்காட்டி நிலை நிறுத்தியும், அவ்வாற்றால் கடவுட்படைப்புகள் எல்லாவற்றிற்கும் நெருங்கிய தொடர்பு உண்டென்பதை விளக்கியும் உலகோரை வியப்பெய்துவித்தவர் ஜகதீஸ சந்திர போஸ் என்னும் பெரியா ராவர்.

நுண்ணிய ஆராய்ச்சிப் புலமை வாய்ந்தவராகிய இவர் வங்காள மாகாணத்தைச் சேர்ந்த டாக்கா ஜில்லாவிலுள்ள விக்ரம்பூர் என்ற சிற்றூரில் பகவன் சந்திரபோஸ் என்பவருக்குத் திருக்குமாரராக 1858-ம் ஆண்டு நவம்பர் மீ 30-ம் நாள் பிறந்தார். நன்றாக

உழைத்துக் கற்று உரிய காலத்தில் கல்கத்தாச் சர்வகலாசாலையில் B. A பட்டம் பெற்ருர். அதன்பின் இங்கிலாந்து சென்று கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையிற் சேர்ந்து B. Sc. பட்டம் பெற்ருர். அதன்பின் நாடுதிரும்பி வங்காள மாகாணக் கல்லூரிப் பொருட்டன்மை யாசிரியராக அமர்ந்து நாற்பதாண்டுகள் அரும்பணி யாற்றி ஓய்வு பெற்ருர்.

ஜகதீஸ சந்திர போஸ் பெரிய செல்வமுடைய ஒரு குடும்பத்திற் பிறந்தவருமல்லர்; பெரிய ஆராய்ச்சியாளராக வேண்டுமென்ற நோக்கத்துடன் இளமையிற் பயிற்றுவிக்கப் பட்டவரு மல்லர். பொதுவாக ஒவ்வொரு இளைஞனுடைய வாழ்க்கையிலும் நேரக்கூடிய இடையூறுகளும் எதிர்பாராத நிகழ்ச்சிகளும் இவரது வாழ்க்கையிலும் நேர்ந்தன. கருதிய நோக்கங் கைகூடாது இவர் பல வேளைகளில் திகைத்து நின்ருர்; பொருளின்மையினுல் பகைவர் இவர் ஆராய்ச்சிகளிற் குறைகூறுவதைக் கேட்டு யாது செய்வதென்று தெரியாமல் விழித்தார். தந்தை பட்ட கடனைச் செலுத்தும் பொருட்டுச் சிக்கனமாக வாழ்க்கை நடத்திஞர். இந்தியனென்று சில ஆங்கில மக்கள் அழுக்காற்ருல் தம்மை உயரவிடாது தடுத்ததைக் கண்டு ஒடுங்கிவிடாமல் போரியற்றி ஒப்பரிய தம் ஆராய்ச்சித் திறனை யாவருமொப்ப நிலைநிறுத்தித் திகழ்கின்ருர்.

இத்தகைய உத்தமப் பெரியாரின் வாழ்க்கை வரலாற்று நுட்பங்களைப் பதினேழு கூறுகளாக வகுத்து முதன் முறையாகத் தமிழில் உரைநடை நூலொன்று எழுதி நம் கழகவாயிலாய் வெளியிட்டிருக்கின்ருேம். அதனைத் தமிழுலகேற்று வாசித்து நலமடையக் கேட்டுக்கொள்கிருேம். —கா. சிவ. க

செய்திகளும் குறிப்புகளும் (News and Notes)

சென்ற கூ-ம் பரல் வெளிவந்தபின்னும், இப்பரல் வெளிவருவதன் முன்னும் காலமான பெரியார்களிற் குறிப்பிடக்கூடியவர்கள்:- பெல்ஜிய நாட்டு மன்னர் ஆல்பர்ட் என்பவர்; வங்காள அரசாங்க அங்கத்தினரான ஸர். பி. வி. மித்தர்; "இந்து" நாள்தாள் ஆசிரியர் திரு. எ. அரங்கசாமி ஐயங்கார்; சென்னைக் கிரௌன் பிராசிக்யூடர் திரு. கே. பி. மாதவ மேனேன்; திருச்சி வான ஊர்தியாளர் திரு. சேஷசாயி; சென்னை நகராண்மைக் கழக உறுப்பினர் திரு. வி. சிவப்பிரகாச முதலியார்; மைசூர் டாக்டர் எச். பி. மயில்வாகனன்.

ஸாரோ ஆகா என்ற ஒரு தருக்கிய முதியோனுக்கு இப்போது வயது 160; அனட்டோலியாவிலுள்ள கோனியா என்னுமிடத்தில் இருக்கும் துலிஸார் என்னும் தருக்கிய முதியோளுக்கு இப்பொழுது வயது 150.

* * *

சென்ற பிப்ரவரித் திங்கள் 10-ம் நாள் காலை ஆறுமணிக்கு "சென்னைக் கல்கத்தா வானஊர்தி வாடகைத்தபாற் போக்குவரவு" முதல் ஊர்தி தபாற்பையுடன் புறப்பட்டது. இதனால் கல்கத்தா சிங்கப்பூர் இரங்கூன் முதலிய இடங்களுக்குக் கடிதப் போக்குவரவு விரைவாக நடைபெறும்.

* * *

சென்னை நகரில்மட்டும் காந்தியின் ஹரிஜன நிதிக்குச் சேர்ந்த தொகை ரூ. 24032-4-11; அதிற் செலவு ரூ. 4613-8-0 போக, மீதி ரூ. 19418-12-11.

* * *

சென்னையில் நடந்த கிட்டிப்பந்து (Cricket) போட்டிப் பந்தயத்தில் இந்தியா இங்கிலாந்தினிடம் 202 ஓட்டங்களால் தோல்வியுற்றது.

* * *

பண்டித ஜவஹர்லால் பன்னிரண்டாவது முறையாக அரசியற் கைதியாகியிருக்கிறார்.

* * *

இந்தியாவிலிருந்து இந்த இரண்டு ஆண்டுகளாக வெளியேறிய தங்கத்தின் விலைமதிப்பு ரூ. 1,69,23,16,330.

* * *

பிப்ரவரித் திங்கள் முடிய பீஹார் மாகாண நில அதிர்ச்சி உதவிக்காக பாபு இராஜேந்திர பிரசாத் அவர்களின் நிதியிற் சேர்ந்தது ரூ. 17,47,897; கனம் அரசப்பிரதிநிதியார் அவர்களின் நிதியிற் சேர்ந்தது ரூ. 24,62,091.

* * *

"ஆங்கில மொழியில் சரியான குறியீடுகள் கிடையாது; பெரும்படியாய் அம் மொழியைப் பயன் படுத்துவதற்குக்கூட அதன் எழுத்துத் தொகை 12 எழுத்துக்களாற் குறைவுற்றிருக்கிறது." என்று இங்கிலாந்தின் தற்காலப் பெரும்புலவராகக் கருதப்படும் ஜியார்ஜ் பெர்னார்ட்ஷா கூறுகிறார்.

காப்பிக்கொட்டையின் வரலாறு

காலையிற் 'கஞ்சி குடித்துக் கழனிக்குச் சென்ற நாள் மலையேறி "காப்பி" குடித்துச் செல்லும் பழக்கம் ஏறக்குறைய மூன்று நூற்றாண்டுகளாய்க் கால் கொண்டுவருகிறது.

மரநூல் வழக்குப்படி ஆங்கிலத்தில் காப்பியை கேஃபியா அரேபிகா என்று சொல்லுவார்கள். இக்காப்பி அரேபியா நாட்டில்

தான் முதன் முதல் தோன்றியதாகும். அரேபியாவிலுள்ள மெக்கா என்ற முகம்மதிய தலத்திற்கு யாத்திரை சென்று திரும்பிய பாபா போதீன் என்ற பக்கிரி யொருவரே அதனை முதன் முதல் இந்தியாவிற்குக் கொண்டு வந்தவராவர். அவர் கொண்டுவந்த சில சிறு காப்பிச் செடிகள் நாளாவட்டத்தில் பல கோடி நூறாயிரமாகப் பெருகி இந்தியாவின் பெரிய வர்த்தகச் சரக்குகளில் சிறந்த தொன்றாக ஆகும் என்று அவர் கனவிலுங் கருதியிரார். மைசூர், குடகு, சேர்வாராயன் மலை, பாபா போதீன் மலை ஆகிய இடங்களில் காப்பி முதன் முதல் விளைவிக்கப் பெற்றது. முதலில் காப்பிச் செடியின் பழுத்த மணிகளைக் கிளைகளில் ஏறி உதிர்த்துச் சேர்த்த நாளெங்கே! சித்திரம் வரைந்ததுபோல் பாத்திகட்டிச் செடிகளை வேண்டுமாறு வெட்டிக் கத்திரித்துப் பாதுகாத்துவரும் இந்நாள் எங்கே! சென்ற எழுபது எண்பது ஆண்டுகளில் உலக வாணியத்துறைகளில் இந்தியக் காப்பிக் கொட்டை இல்லாததோரிடமில்லை. உலக முழுதும் உட்கொள்ளும் "காப்பி" நீருக்கு வேண்டிய காப்பிக் கொட்டையை இந்தியாவே பெரும்பான்மையாக அளித்துவருகின்றது. —கா. சிவ. க

மதிப்புரை :

மாணிக்கவாசகர் புராணம்

அழகிய இச்சிறு நூல் மணிவாசகப் பெருமானது வாலாற்றை நல்ல தமிழ் உரைநடையிற் கூறுவதாகும். திருவிளையாடற் புராணம், திருவாதவூர் புராணம், ஆலாசிய மான்மியம் முதலியவற்றைப் பின்பற்றியது. இதன் ஆசிரியர் யாழ்ப்பாணத்துப் புலோலி மகாவித்துவான் வ. கணபதிப்பிள்ளையவர்களாவர். இவர் மொழிநூலாசிரியராகிய மாகறல் கார்த்திகேய முதலியாரவர்களின் ஆசிரியர்களில் ஒருவராவர்; தமிழிலும் வடமொழியிலும் மகா பண்டிதர். இத்தகைய பெரியார் எழுதிய இந்நூலிற்குப் புத்துயிரளித்து மீட்டும் இதைத் தமிழுலகத்திற்கு உதவியவர் திருமயிலை சே. வெ. ஜம்புலிங்கம் பிள்ளையாவர். தமிழுலகிற்குப் பலவாண்டுகளாகப் பிள்ளையவர்கள் செய்துவரும் ஊழியம் யாவருமறிந்ததே. அவர்களது நன்முயற்சியால் திராவிடப்பிரகாசிகை, பறாளை விநாயகர் பள்ளு, தண்டிகைக் கனகராயன் பள்ளு, சைவசித்தாந்த சங்கிரகம் முதலியன அண்மையில் வெளிவந்தன. பிள்ளையவர்கள் இத்தகைய தொண்டில் காலூன்றி நின்று தமிழர்களுக்கு மேன் மேலும் பேருதவி புரிந்து வருவார்களென நம்புகிறோம். பிரதி ஒன்றன்விலை அணா பத்து. நமது கழகத்திற் கிடைக்கும்.